பக்கங்கள்: பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 27 ஞாயிற்றுக்கிழமை (13-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:320

## விசாரணைக்கு மூவர் குழு

கொழும்பு,ஒக்.13

திருக்கோவில் காஞ்சிரங்குடா பகுதியில் கடந்த புதன்கிழமை அதிரடிப் படையினர் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் தலைமையில் இயங்கவுள்ள இக்குழுவில் விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதியாக சீ.வி.கே.சிவஞானம் இடம்பெறுகிறார்.

வேலணையில் விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி பொறுப்பாளர் செம்மணனும் அவரது உதவியாளரும் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய குழுவில் இடம்பெற்ற பிரதிநிதிகளே இந்தக் குழுவிலும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை -

இந்த விசாரணைக் குழுவில் தனக்குப் பதிலாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவரைச் சேர்த்துக்கொள்ளுமாறு சீ.வி.கே.சிவஞானம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் கேட்டிருக்கிறார். (ஐ)

## திருகோணமலை வன்செயல்களில் ஜே.வி.பி. தொடர்பு

கொழும்பு,ஒக்.13

திருமலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் ஜே.வி.பியினர் தொடர்புபட்டுள்ளார்கள் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எஸ்.எம்.அஸ்வர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பியினர் கொலை வெறி பிடித்தவர்கள். அவர்களே பின்னணியில் நின்று தமிழர்களைப் படுகொலை புரிந்துள்ளார்கள்.

சமாதான முயற்சிகளைக் குழப்பும் எண்ணங்கொண்ட ஜே.வி.பியினர் குண்டர்களை ஏவிவிட்டு இச்செயலைச் செய்துள்ளார்கள் - என்று அவர் தெரிவித்துள்ளார். (ஐ-12)

## இறுதிச் சடங்கு இன்று நடக்கும்

திருகோணமலை,ஒக்.13

திருகோணமலையில் நேற்று முன்தினம் ஹர்த்தாலின்போது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் கொல்லப்பட்ட மூன்று பொதுமக்களில் இருவரின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளன.

கோணமுத்து கோணேசலிங்கம், கந்தசாமி சசிக்குமார் ஆகிய இருவரதும் பூதவுடல்கள் அவர்களது இல்லங்களில் இருந்து இன்று நண்பகல் ஒரு மணிக்கு எடுத்துவரப்பட்டு திருமலை கலாசார மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும். பிற்பகல் 3மணிவரை அங்கு அஞ்சலிகள் இடம்பெறும். கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அஞ்சலி செலுத்துவர். அஞ்சலி உரைகளும் இடம்பெறும். அதன் பின்னர் இறுதிச் சடங்குகள் நடைபெறும்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த மற்றொருவரான கிறிஸ்ரி மயூரனின் பூதவுடல் அன்புவழிபுரத்தில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. (ஐ-3-9-1-45)

## 3 அமைச்சர்கள் இன்று திருமலைக்கு

திருகோணமலை,ஒக்.13

திருகோணமலை அன்புவழிபுரத்தில் நேற்றுமுன்தினம் ஹர்த்தாலின் போது பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட கிரனேட் வீச்சு மற்றும் துப்பாக்கிச் சூட்டு தாக்குதல்கள் குறித்து நேரில் ஆராய மூன்று அமைச்சர்கள் இன்று திருமலை வருகின்றனர்.

உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, உல்லாசப்பயணத் துறை அமைச்சர் காமினி லொக்குகே, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் இன்று திருமலைக்கு விஜயம் செய்கின்றனர். (ஐ-3)

## ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள் சங்கமிக்கும் மூன்று நாள் மாநாடு

### யாழ்ப்பாணத்தில் நடத்த புலிகள் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.13

ஊடகவியலாளர்கள், கலை, இலக்கியவாதிகள் கலந்துகொள்ளும் மூன்று நாள் மாநாடு ஒன்று இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

'மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழரின் உரிமைப் போராட்டமும் முன்னெடுக்கப்படவேண்டிய மீதிப் பணிகளும்' என்னும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இந்த மாநாட்டை விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம், 'நிதர்சனம்' நிறுவனம், தமிழ்த் தாய் வெளியீட்டகம், வெளிச்சம் சஞ்சிகை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்திலிருந்து திரும்புவதற்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

நேற்றுமுன்தினம் நயினாதீவு சென்ற விடுதலைப் புலிகளின் அரசியல்துறை மூத்த பிரமுகர் பாப்பா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் திரும்புவதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### காஞ்சிரங்குடா தாக்குதலைக் கண்டித்து

# ஹர்த்தாலால் நேற்று குடாநாடு ஸ்தம்பிதம்

## மூலை முடுக்கு எங்கும் மக்கள் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்,13

**கிழக்கில் அம்பாறையில் அப்பாவித் தமிழ் மக்கள் ஏழுபேர் விசேட அதிரடிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தால் காரணமாக குடாநாட்டில் இயல்புநிலை நேற்று முற்றாக முடங்கியது.**

**அதிரடிப்படையினரின் வேட்டைக்கு இரையாகிய அப்பாவிகளுக்காக மக்கள் அமைதியான முறையில் துக்கம் அனுஷ்டித்தனர்.**

ஹர்த்தாலை ஒட்டி முக்கிய வீதிகளில் நேற்றுக்காலை முதல் ரயர்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டிருந்தன. படையினரின் பிரதான போக்குவரத்து வீதிகளிலும் ரயர்கள் எரிக்கப்பட்டன. வீதித் தடைகள் போடப்பட்டன. இதனால் படையினரின் வாகனப் போக்குவரத்துக்கள் குறைந்திருந்தன.

யாழ்.நகரப் பகுதி மற்றும் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களி

(02ஆம் பக்கம் பார்க்க)



வெறிச்சோடிப்போய்க்கிடந்த நகரின் ஒரு பகுதி.



பலாலி வீதியில் ரயர்கள் எரிக்கப்பட்டபோது வீதியை மறைத்து மேலெழுந்த கரும்புகை மண்டலம். (படம்: தேவராஜன்)

## திருமலை நிலைமை குறித்து உயர்மட்ட மாநாட்டில் ஆராய்வு

திருகோணமலை,ஒக்.13

திருகோணமலை அன்புவழிபுரத்தில் ஹர்த்தாலின்போது இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களில் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைது செய்ய நடவடிக்கை எடுப்பதென திருமலை கடற்படைத்தளத்தில் நேற்றுக் காலை நடந்த உயர்மட்ட மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

திருகோணமலையில் உருவாகியுள்ள பதற்ற நிலைமை தொடர்பாக

(02ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்திய படையினரை இனங்காட்ட மக்கள் தயார்!

### புலிகளின் திருமலை பொறுப்பாளர் தகவல்

திருகோணமலை,ஒக்.13

திருகோணமலை அன்புவழிபுரத்தில் ஹர்த்தாலின்போது தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை பொலீஸாரும் ஊர்காவல் படையினரும் இணைந்தே நடத்தியிருக்கின்றனர். இவர்களுக்குப் பின்னணியில் இராணுவத்தினர் இருந்துள்ளனர். இதற்கான சாட்சியங்கள் உள்ளன.

இப்படிக் கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திலக்.

திருகோணமலைக்கு நேற்று வருகை தந்த யுத்தநிறுத்தக் கண்

(02ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை

## வடக்கு - கிழக்கில் அனைத்து மாவட்டங்களும் செயலிழந்தன!

யாழ்ப்பாணம்,ஒக்.13

அம்பாறை மாவட்டம் திருக்கோவில், காஞ்சிரங்குடாவில் அதிரடிப்படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்தும் -

அத்தாக்குதலில் உயிரிழந்த ஏழு அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தியும் - நேற்று வடக்கு - கிழக்கின் ஏனைய பிரதேசங்களிலும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் மற்றும் துக்கதினம் காரணமாக சகல சேவைகளும் செயலிழந்தன.

அந்தந்த மாவட்டங்களில் செயற்படும் பொது அமைப்புக்களால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று மக்கள் உணர்வுபூர்வமாக இந்தப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

வடக்கு - கிழக்கின சகல மாவட்டங்களிலும் ஹர்த்தால் பூரணமாக அனுஷ்டிக்கப்பட்டதாக மாகாண செய்தியாளர்கள் தகவல் தந்துள்ளனர்.

**வன்னியில்**

வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்

(02ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றிரவும் ஊரடங்கு

திருகோணமலை,ஒக்.13

திருகோணமலை பொலீஸ் பிரிவில் நேற்றிரவு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்கு இன்று அதிகாலை 6மணிக்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு முன்னேற்பாடாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது. (ஐ-3-12)

# வாணி விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.13

நல்லூர் றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த கலைவாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கலட்டியில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர் நிலையத்தின் மண்டபத்தில் ஒன்றுகூடல் இடம்பெறவுள்ளது.

கழகத்தின் செயற்திட்ட இயக்குநர் யோ.கவிதாசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (ஐ-3)

* * *

அரியாலை,ஒக்.13

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும்.

விழாவில் திருமதி சுந்தரேஸ்வரி ஜெயக்குமாரன் குழுவினரின் வீணைக் கச்சேரியும், செல்வன் தவநாதன் றொபேட்டின் பாட்டுக் கச்சேரியும் மற்றும் நடன நிகழ்ச்சி என்பனவும் இடம்பெறும். (ஐ-17)

* * *

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.13

உரும்பிராய் பிறைற்றின் கல்வி நிலைய வாணிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் செல்வன் செ.ஜெயசுதன் தலைமையில் இடம்பெறும்.

முன்னாள் ஆசிரியர் எஸ்.நந்தகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-133)

* * *

புன்னாலைக்கட்டுவன் கணேச சனசமூக நிலையம் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு தலைவர் நா. திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும்.

விசேட பூஜை வழிபாடுகளுடன் நவராத்திரி பாமாலை மற்றும் நிகழ்வுகளும் இடம்பெறும். (ஐ-133)

* * *

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் நடத்தும் வாணி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி லீலாவதி மாரிமுத்து தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-175)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.பல்கலைக்கழகத்தின் 22 ஆவது பட்டமளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வெளிவாரிப் பட்டதாரிகள் 222 பேர் உட்பட ஆயிரத்து 332பேர் இன்று பட்டங்கள் பெறுகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

முதலாவது அமர்வு காலை 8.30 மணிக்கும், இரண்டாவது அமர்வு முற்பகல் 10மணிக்கும், மூன்றாவது அமர்வு முற்பகல் 11.30மணிக்கும், 4ஆவது அமர்வு நண்பகல் ஒரு மணிக்கும், இறுதி அமர்வு பிற்பகல் 2.30மணிக்கும் இடம்பெறும்.

கலைமாணிப் பட்டத்தை 381 பேரும், தொழில் நிர்வாகமாணிப் பட்டத்தை 89பேரும், வர்த்தகமாணிப் பட்டத்தை 73பேரும், நுண்கலை மாணிப் பட்டத்தை 106பேரும், மருத்துவ சத்திரசிகிச்சை மாணிப் பட்டத்தை 20 பேரும், சித்த மருத்துவ சத்திரசிகிச்சை மாணிப் பட்டத்தை 10பேரும், விஞ்ஞானமாணிப் பட்டத்தை 131பேரும், விவசாய விஞ்ஞான மாணிப் பட்டத்தை 17பேரும் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இசை டிப்ளோமா பட்டம் 28பேர் பெறுகின்றனர். மீன்பிடியியல் டிப்ளோமா பட்டத்தை 52பேரும், உடற்கல்விப் பட்டத்தை 27பேரும் பெற்றுக்கொள்வர். இப்பட்டமளிப்பு விழாவில் பல்வேறு சிறப்புத் தகைமைகளுக்காக பரிசில்களும், தங்கப்பதக்கங்களும், புலமைப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

நேற்று நடைபெற ஏற்பாடாகியிருந்த இந்த விழா குடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால் காரணமாக இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-5)

# சிறுவர் நன்னடத்தை இல்லம் இருபாலையில் இயங்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஒக்.13

குற்றச் செயல்களில் ஈடுபடும் பெண்கள் மற்றும் பராயமடையாதவர்களைப் பராமரிப்பதற்கு கோப்பாய் கானான் சிறுவர் பராமரிப்பு இல்லத்தை அங்கீகரிக்கப்பட்ட இல்லமாக நீதி அமைச்சு பிரகடனம் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் முன்னர் இயங்கி வந்த நன்னடத்தை இல்லம் செயற்பாடின்றி மூடப்பட்டதால் இத்தகையவர்களைப் பராமரிப்பதில் பெரும் பிரச்சினை உருவாகியிருந்தது.

இதை அடுத்தே கானான் இல்லத்தை அங்கீகரிக்கப்பட்ட சிறுவர் நன்னடத்தை இல்லமாக நீதி அமைச்சு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது.

# தாவடியில் தவறணையை மூட யாழ். நீதிமன்றம் உத்தரவு!

யாழ்ப்பாணம்.ஒக்.13

கோண்டாவில் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் தாவடியில் அமைக்கப்பட்டுள்ள தவறணையை உடனடியாக மூடுமாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார்.

அந்தத்தவறணைக்கு சமீபமாகவுள்ள ஆலயம் ஒன்றின் வழிபடுவோர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனுவை விசாரித்த நீதிவான் தவறணையை உடனடியாக மூடுமாறு சங்க முகாமையாளருக்கு உத்தரவிட்டார்.

தவறணை மூடப்படுவதை நேரடியாக பார்வையிட்டு அது பற்றி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி நல்லூர் உதவி அரசாங்க அதிபருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.13

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் மாபெரும் சதுரங்கப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவிருக்கின்றது.

★ ★ ★

வலி.வடக்கு.ஒக்.13

தென்மராட்சி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்றைய ஆட்டங்கள் 14, 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளன. (ஐ-86)

# கிழக்கில் அதிரடிப் படையினரை வாபஸ்பெறுமாறு புலிகள் வற்புறுத்து

மட்டக்களப்பு,ஒக்.13

கிழக்கில் அதிரடிப்படையினர் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்பதற்கு காஞ்சிரங்குடா, திருமலைத் தாக்குதல்கள் சான்றாகின்றன. எனவே அதிரடிப்படையினரை அங்கிருந்து விலக்குவதே எதிர்காலத்தில் பிரச்சினைகள் எழாமல் தடுக்க உள்ள ஒரே வழியாகும்.

விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தளபதி கேணல் கருணா மேற்கண்டவாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு கரடியனாறில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் மாலை வருகைதந்த யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் றொன்ட் புருகோவிட்டுடன் நடத்திய கலந்துரையாடலின்போதே கருணா இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கௌசல்யனும் கலந்துகொண்டார். கேணல் கருணா மேலும் தெரிவித்ததாவது:-

அரசுத் தரப்பும், மக்களும், புலிகளும் சமாதானத்தையே விரும்புகின்றனர். சமாதானத்தை விரும்பாதவர்களே தமிழ்மக்கள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர். இத்தகைய தாக்குதல்களால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவித் தமிழ் பொது மக்களேயாவர்.

கடந்த காலங்களில் அதிரடிப்படையினரால் தமிழ் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வந்தனர். சமாதான சூழ்நிலையிலாவது நிம்மதியாக வாழலாம் என அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

காஞ்சிரங்குடாவில் இருந்து அதிரடிப்படையினரை விலக்காவிட்டால் பிரச்சினைகள் தொடர்ந்தும் இடம்பெற வாய்ப்பு உள்ளது - என்று தெரிவித்தார். (ஐ-3-21)



மட்டக்களப்பு வருகைதந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் றொன்ட் புருகோவிட், விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தளபதி கேணல் கருணா, மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோருடன் கலந்துரையாடுகிறார்.

## காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட இளைஞன் மரணம்

படுகாயமடைந்த நிலையில் நேற்றுமாலை யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் சிறிது நேரத்தில் அங்கு மரணமடைந்தார்.

அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த ராஜா என அழைக்கப்படும் ஜெயகுணதீபன் பிரதபன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு மரணமானவர் ஆவார். வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இவர், சத்திரத்துச் சந்திக்கு அருகாமையில் மின்கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார் என்று கூறப்படுகிறது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## ஹர்த்தாலால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் பிரதான வீதிகளில் பொதுமக்கள் ரயர்களைப் போட்டு எரித்து போக்குவரத்தைத் தடை செய்தனர். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்தியில் நேற்றுக் காலை ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் அங்கு வீதியின் நடுவே தடைகளைப் போட்டதுடன் வீதியில் ரயர்களைப் போட்டு எரித்தனர். இதனால் பலாலி வீதியூடான படையினரின் போக்குவரத்தும் தடைப்பட்டது.

சில இடங்களில் வீதிகளின் குறுக்கே மரக்குற்றிகள், முட்கம்பிகள் என்பன போடப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது.

மருந்தகங்கள், தேநீர்க்கடைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள், அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் அனைத்தும் நேற்று முழுநாளும் மூடப்பட்டிருந்தன.

அரச மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களும், வாடகைக்கார், ஓட்டோ மற்றும் ஏனைய வாகனங்களும் சேவையில் ஈடுபடவில்லை. வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஆங்காங்கே சோககீதங்களும் ஒலிபரப்பப்பட்டன.

இதேவேளை -

தென்பகுதியில் இருந்து யாழ். குடாநாட்டுக்கு வாகனங்களின் வருகையும் நேற்று மிகக் குறைவாகவே காணப்பட்டது.

வாகனப்போக்குவரத்து இன்றி 'ஏ-9' நெடுஞ்சாலையும் நேற்று வெறிச்சோடியது.

22ஆவது பட்டமளிப்பு விழாவை பெரும் கோலாகலமாகக் கொண்டாடுவதற்குத் தயாராகியிருந்த யாழ்.பல்கலைக்கழக வளாகம் நேற்று சோபையிழந்து கிடந்தது. அந்தப் பகுதியில் சோககீதம் இசைக்கப்பட்டது.

நேற்று நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழா ஒத்திவைக்கப்பட்டு இன்று நடைபெறவுள்ளது.

இதேபோன்று நேற்று நடைபெறவிருந்த பல பொது நிகழ்ச்சிகளும் ஒத்திவைக்கப்பட்டன. (ஐ-4-8-12-15-51-70-173-135-86-111-31-117)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆராய்வதற்காக இந்த மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பலகல்ல, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் தயா சந்தகிரி, பொலிஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா, திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் ஹேரவகே, அரச அதிபர் நெலுக்தெனிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர்களை கைதுசெய்ய உடன் நடவடிக்கை எடுப்பது என முடிவு செய்யப்பட்டது.

இதன் பின்னர் படைத்தளபதிகள் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் றொன்ட் புருகோவிட்டுடன் கலந்துரையாடினர். (ஐ-3)

## தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் றொன்ட் புருகோவிட்டுடன் நடந்த கலந்துரையாடலின் போதே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலையில் மக்கள் அமைதியான முறையிலேயே ஹர்த்தாலில் ஈடுபட்டனர். அச்சமயம் வீதி மறிப்புப் போராட்டத்திலும் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். அவ்வேளை அவர்கள் மீது கிரனேட் வீசப்பட்டது. துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்; 38 பேர் காயமடைந்தனர்.

இத்தாக்குதலில் பொலீஸாரும் ஊர்காவல் படையினருமே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். பின்னணியில் படையினரும் இருந்துள்ளனர்.

காயமடைந்தவர்களும் மறியலில் ஈடுபட்டவர்களும் சம்பந்தப்பட்ட பொலீஸாரையும் ஊர்காவல் படையினரையும் அடையாளம் காட்டுவதற்குத் தயாராக இருக்கின்றார்கள்

- இப்படி அவர் தெரிவித்தார்.

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக கண்காணிப்புக் குழுத் தலைவர் உறுதியளித்தார். (ஐ-3-9)

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டது. கடைகள், சந்தைகள், தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டு கிடந்தன. அரசு, தனியார் துறை போக்குவரத்துக்கள் என்பனவும் இடம்பெறவில்லை. எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. சோக கீதம் இசைக்கப்பட்டது.

**வவுனியாவில்**

வவுனியா மாவட்டத்தில் ஹர்த்தால் காரணமாக சகல சேவைகளும் செயலிழந்தன. கடைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனியார் வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் யாவும் மூடிக்கிடந்தன.

வாகனப் போக்குவரத்து முற்று முழுதாக ஸ்தம்பித்து இருந்தது. தெற்கிலிருந்து வாகனங்கள் வருவதும் குறைந்திருந்தது.

கண்டி வீதி ஊடான போக்குவரத்து இடம்பெறாததால் வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. வவுனியா வளாகத்தில் நேற்று இடம்பெறவிருந்த பரீட்சைகளும் ரத்துச்செய்யப்பட்டிருந்தன.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடைகள், சந்தைகள் மூடப்பட்டு சகல சேவைகளும் ஸ்தம்பித்த நிலையில் இருந்தன. போக்குவரத்துக்கள் யாவும் முற்றுமுழுதாக ஸ்தம்பித்து இருந்தன. காலையில் வீதிகளில் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் நடமாட்டம் காணப்பட்டது. நண்பகலுக்குப் பின்னர் வீதிகள் முற்றாக வெறிச்சோடின.

நகருக்கு வெளியே காத்தான்குடி, ஏறாவூர் பகுதிகளில் உள்ள முஸ்லிம் கடைகள் காலையில் திறந்திருந்த போதும் பிற்பகலில் அவை மூடப்பட்டிருந்தன. 'வெளி' மாவட்டங்களுக்கான போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் மட்டக்களப்பு நகரில் நடத்தப்படும் பொருண்மிய கண்காட்சி நேற்று ரத்துச் செய்யப்பட்டது. இன்றும் கண்காட்சி இடம்பெறமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது. நாளையும் நாளைமறுதினமும் இக்கண்காட்சி தொடர்ந்து நடத்தப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**அம்பாறையில்**

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து மாவட்டத்தின் தமிழர் வாழும் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தபோதும், நேற்றைய ஹர்த்தால் காரணமாக மாவட்டத்தின் சகல செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன.

முஸ்லிம் பகுதிகளில் சில இடங்களில் கடைகள் திறக்கப்பட்டிருந்த போதும் போக்குவரத்து இன்றி வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன.

போக்குவரத்தை தடை செய்யும் வகையில் வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன.

**திருகோணமலையில்**

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஹர்த்தாலின்போது நடந்த தாக்குதலை அடுத்து பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு நேற்று அதிகாலை 6 மணிக்கு நீக்கப்பட்ட பின்னர் ஓரளவு வழமை நிலை ஏற்பட்டது. எனினும், உயிரிழந்த பொதுமக்களுக்காக அங்கு துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதால் சில இடங்களில் கடைகள் மூடப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

இன்றும் துக்கதினம் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**மன்னாரில்**

மன்னார் மாவட்டத்தில் ஹர்த்தால் காரணமாக சகல செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன. கடைகள் மூடப்பட்டுக்கிடந்தன. போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை.

வெளியிடங்களுக்கான போக்குவரத்துக்களும் தடைப்பட்டன. (ஐ-3-21-344-164)

# ஈராக் மீது தாக்க புஷ்ஷுக்கு அமெ.நாடாளுமன்றம் அனுமதி

வாஷிங்ரன்,ஒக்.13

தேவையேற்படும்போது ஈராக்மீது போர் தொடுக்கும் உத்தரவை இராணுவத்துக்குக் கொடுக்கும் அதிகாரத்தை அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு அமெரிக்க நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

மூன்று நாள்களாக இடம்பெற்ற விவாதத்தின் பின்னர் இந்த அனுமதியை வழங்கும் பிரேரணை 163 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேறியது. 435 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 296 பேர் ஆதரவாகவும் 133 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

அதன் பின்னர் இந்தப் பிரேரணை மீது மேல் சபையான செனட்டில் வாக்கெடுப்பு நடந்தது. செனட் சபையில் புஷ்ஷின் குடியரசுக் கட்சிக்கு எதிரான ஜனநாயகக் கட்சிக்கே பெரும்பான்மை இருந்தபோதிலும் பிரேரணை 54 வாக்குகள் வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 77 வாக்குகளும் எதிராக 23 வாக்குகளும் கிடைத்தன.

ஈராக்கின்மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வழிவகுக்கும் புதிய பிரேரணை ஒன்றை ஐ.நா. பாதுகாப்புச் சபை நிறைவேற்றவில்லையாயின் ஈராக்மீது அமெரிக்கா தனிச்சையான தாக்குதல்களை நடத்தவும் தயங்காது என்று புஷ் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில், இந்தப் பிரேரணை அமெரிக்க நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன்மூலம் எப்பொழுதும் ஈராக் மீது தாக்குதல் நடத்தும் அதிகாரம் புஷ்ஷுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

அடுத்த ஆண்டுக்கான இராணுவச் செலவுக்கு சுமார் 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து இருப்பதற்கும் அமெரிக்க நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது கடந்த ஆண்டு பாதுகாப்புச் செலவினத்துக்கு அமெரிக்கா ஒதுக்கிய தொகையைவிட சுமார் 2 லட்சம் கோடி ரூபா அதிகம். (ம)

# கண்காணிப்பாளர்களை வரவேற்க ஈராக் தயார்

பக்தாத்,ஒக்.13

ஐ.நா.ஆயுதக் கண்காணிப்பாளர்கள இன்னும் ஒருவார காலத்துக்குள் ஈராக் திரும்பினால் அவர்களை வரவேற்க தாம் தயார் என்று ஈராக் அறிவித்துள்ளது. ஆயுதக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹன்ஸ் பிலிக்ஸ்ஸுக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்தில் ஈராக் இதனை தெரிவித்துள்ளது. கண்காணிப்பாளர்கள் ஈராக் திரும்புவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு ஹன்ஸ் பிலிக்ஸ் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் ஈராக்குக்கு கடிதம் அனுப்பியிருந்தார். அதற்கே ஈராக் பதில் அனுப்பி வைத்துள்ளது.


மொஸ்கோவில் புடினுடன் பிளேயர்

பிலிக்ஸ் முன்னர் அனுப்பிய கடிதத்தில் ஒக்ரோபர் 19ஆம் திகதி கண்காணிப்புக் குழு ஈராக் திரும்பும் என்று தெரிவித்திருந்தார். ஆனால், இப்போது அதனை அவர் பிற்போட்டுள்ளார்.

ஈராக்குக்கு எதிராக ஐ.நா.பாதுகாப்புச் சபையில் புதிய பிரேரணை ஒன்றை நிறைவேற்றுவதில் தொடர்ந்து இழுபறிநிலை தொடர்கிறது. இதற்கு ஒரு முடிவு கிடைக்கும்வரை ஈராக் திரும்புவதில்லை என்று ஹன்ஸ் தீர்மானித்துள்ளார்.

இதற்கிடையில் -

ஈராக்குக்கு எதிரான புதிய தீர்மானம் தொடர்பான விவாதம் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தலைவர் மார்ட்டின் பிலிங்கா எபொடு அறிவித்துள்ளார்.

புதிய பிரேரணைக்கு எதிராக பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் கருத்துத் தெரிவித்துவருகின்றன. ஆயுத சோதனைக்கு முன் இத்தகைய பிரேரணை தேவையற்றது என்றும் அவை கூறுகின்றன.

ஆனால், பிரேரணைக்கு ஆதரவு பெறும் முயற்சியில் அமெரிக்காவும் பிரிட்டனும் தொடர்ந்து முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளன. முன்னதாக வெள்ளியன்று, புதிய பிரேரணைக்கு ஆதரவாக ரஷ்யா செயற்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர் எச்சரிக்கையுடன் கருத்துத் தெரிவித்தார்.

மொஸ்கோவில் ரஷ்ய அதிபர் புடினுடன் சந்தித்துப் பேசிய பின்னரே பிளேயர் இக்கருத்தை வெளியிட்டார். (ம)

## கார்ட்டர் கண்டனம்

வாஷிங்ரன்,ஒக்.13

ஈராக் மீது தாக்குதல் நடத்தும் அதிகாரத்தை அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு நாடாளுமன்றம் வழங்கியதை சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் கண்டித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் முடிவு மிகத் தவறானது என்றார் அவர். சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்ட பின்னர் செய்தியாளரிடம் பேசிய அவர் ஈராக்குக்கு எதிரான எந்த நடவடிக்கையையும் அமெரிக்கா ஐ.நா. ஊடாகவே எடுக்க வேண்டும் என்றார்.

## உலக அரங்கில்

## பின்லாந்தில் குண்டுவெடிப்பு 7 பேர் பலி!

ஹெல்சிங்கி,ஒக்.13

பின்லாந்தின் தலைநகரான ஹெல்சிங்கியில் வர்த்தக நிலையம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 7 பேர் கொல்லப்பட்டனர்; 80 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

குண்டுவெடித்த 3 மாடிக்கட்டடத்தில் அச்சமயத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தனர். வெடிச் சம்பவத்தால் அங்கு ஏற்பட்ட நெரிசலில் சிக்கிப் பலர் காயமடைந்தனர்.

# பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் முஷாரப் ஆதரவுக் கட்சி வெற்றி

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் ஆட்சி இராணுவப் புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்ட பின்னர் முதற்றடவையாக இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப்புக்கு ஆதரவான கட்சி தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால், எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

272 ஆசனங்களைக் கொண்ட பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் முஷாரப் ஆதரவுக் கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (காயித் - இ - அசாம்) கட்சி 77 இடங்களையும் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் 14 இடங்களையும் பாகிஸ்தான் மக்கள் கட்சி 63 இடங்களையும மஜ்லிஸ் இ - அமால் கட்சி 45 இடங்களையும் ஏனையவை 68 இடங்களையும் பெற்றுள்ளன. இரு இடங்களில் மறுவாக்குப் பதிவு இடம்பெறவுள்ளன.

எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத காரணத்தினால் கூட்டணி ஆட்சியே அமையும் சூழல ஏற்பட்டுள்ளது. அதேசமயம் இஸ்லாமிய மத அடிப்படைவாதக் கட்சியான மஜ்லிஸ் இ - அமால் கட்சி மூன்றாம இடத்தைக் கைப்பற்றிக் கொண்டுள்ளதால் முஷாரபின் ஆதரவுக் கட்சி ஆட்சி அமைப்பதில் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டுள்ளது.

## அட்லாண்டிஸ் விண்ணில்

அமெரிக்காவின் விண்கலம் அட்லாண்டிஸ், கென்னடி விண்வெளி நிலையத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது. 6 விண்வெளி வீரர்கள் இந்த விண்கலத்தில் விண்ணுக்குச் சென்றுள்ளனர்.

விண்வெளியிலுள்ள சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்லும் இந்த விண்கலம் 11 நாள்கள் விண்வெளியில் சஞ்சரிக்கும்.

இந்த விண்கலத்தில் 'மினிகமரா' ஒன்றும் பொருத்தப்பட்டு உள்ளது. விண்வெளி வீரர்களுடன் செல்லும் விண்கலத்தில் 'கமரா' பொருத்தப்பட்டிருப்பது இதுதான் முதல்முறை ஆகும். (ஒ)

# அமெரிக்க தூதரகம் அருகே தற்கொலையாளி கைது!

## இஸ்ரேலில் சம்பவம்

ஜெருசலேம்,ஒக்.13

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து தூதரகத்தின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

தூதரகத்தில் இருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் உள்ள தேநீர்க் கடை ஒன்றில் வைத்தே தற்கொலையாளி கைது செய்யப்பட்டார்.

கடைக்குள் நுழைய முயன்ற ஒருவரை காவலாளி சந்தேகத்தின் பேரில் தடுத்து நிறுத்தி சோதனை செய்ததில் அவர் உடலில் குண்டுகளைப் பொருத்தி இருந்தது தெரியவந்தது. உடனடியாக அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு அவரது உடலில் இருந்த குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன.

அந்தத் தற்கொலையாளி யார் என்று அடையாளம் காணப்படவில்லை.

தற்கொலையாளியைக் கைது செய்த கடைக் காவலாளி அது குறித்துத் தெரிவித்ததாவது:-

"அந்த நபர் கடைக்குள் நுழைய முயன்றார். சந்தேகத்தில் நான் அவரைச் சோதனையிட்டேன் குண்டுகளைக் கண்டுபிடிக்கும் கருவி மூலம் சோதனையிட்டேன். அவரது உடல் பகுதிக்கு அண்மையில் கருவியைக் கொண்டு சென்றேன். அதிலிருந்து 'பீப்' சத்தம் வந்தது.

"நான் அவரிடம் வினவினேன் என்ன அது? என்று. 'அது என்னுடையது' என்று அவர் பதிலளித்தார். நான் சொன்னேன் நான் யாருடையது என்று கேட்கவில்லை. அது என்ன பொருள் என்றே கேட்டேன் - என்று. "அதற்கிடையில் அந்த நபர் தனது கையை தனது கார்சட்டைப் பையில் நுழைத்தார். எனக்கு குண்டு பற்றித் தெரியும். நான் ரஷ்ய இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றியவன். எனவே, உடனடியாக அந்த நபரின் கைகளைப் பிடித்து இழுத்தேன்"- என்றார் 30 வயதான மிக்கைகல் சர்ஜிசோவ். (ம)

# நேபாளத் தலைநகரில் நேற்று குண்டு வெடிப்பு

## ஒருவர் பலி; 8பேர் காயம்

காத்மண்டு,ஒக்.13

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; வேறு எட்டுப் பேர் காயமடைந்தனர்.

இந்தக் குண்டு வெடிப்பால் நகரில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மன்னா மகேந்திராவின் உருவச்சிலை சுக்குநூறானது. தற்போதைய மன்னர் ஞானேந்திராவின் தந்தையே மகேந்திரா.

மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என்று வழமை போன்று பொலீஸார் குற்றஞ்சாட்டி உள்ளனர். நாட்டின் புதிய பிரதமராக லோகேந்திர பகதூர் சந்தை மன்னர் ஞானேந்திரா நியமித்த ஒருநாளின் பின்னர் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பிரதமர் ஷேக் பகதூர் தேபாவையும் அவரது அமைச்சரவையையும் பதவியில் இருந்து அகற்றினார் மன்னர் ஞானேந்திரா. அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரான கிரிஜா பிரசாத் கொய்ராலா, மாதவகுமார் நேபால், சூரியபகதூர் தபா, பத்ரி பிரசாத் ஆகியோரைச் சந்தித்து உரையாடினார்.



அதன் பின்னர் புதிய பிரதமரை நியமனம் செய்தார். முன்னாள் பிரதமரான லோகேந்திர பகதூர் சந்தே புதிய பிரதமராக நியமனம் பெற்றுள்ளார். அவரது அமைச்சரவைக்கு 6அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதவியேற்ற பின்னர் பேசிய புதிய பிரதமர், "நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக தீவிரவாதிகளுடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் நான் வெற்றி பெறுவேன்" - என்று கூறினார்.

### குண்டு வெடிப்பு

நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலை மோட்டார் சைக்கிள்களில் வந்த மூவரே நிகழ்த்தியதாகப் பொலீஸார் கூறுகின்றனர். அவர்கள் வெடிபொருள்களை எடுத்து வந்து மன்னரின் சிலையருகில் வைத்துவிட்டுத் தப்பியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

"காலை 5.30மணியளவில் பெரும் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அந்த அதிர்ச்சியில்தான் நான் நித்திரையில் இருந்து எழுந்தேன்" - என்றார் அப்பகுதி வாசி ஒருவர். "வெளியே சென்று பார்த்தபோது சிலை அருகில் எங்கும் இரத்தம் சிதறிக் காணப்பட்டது" - என்று அவர் மேலும் சொன்னார்.

### சமாதானத்துக்கு ஆற்றிய பணிக்காக

# அமெ. முன்னாள் அதிபர் கார்ட்டருக்கு நோபல் பரிசு

## புஷ் ஆட்சிமீதான விமர்சனம் என்று கருத்து

ஒஸ்லோ,ஒக்.13

இந்த ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசு அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருப்பது, இப்போதைய அதிபர் புஷ்ஷின் ஆட்சி மீதான விமர்சனம் ஆகும் - இவ்வாறு சமாதானத்துக்கான நோபல் பரிசுத் தேர்வுக்குழுத் தலைவர் கன்னர் பெர்ஜ் கூறினார்.

பரிசு அறிவிப்பை வெளியிட்ட பின், ஒஸ்லோவில் வெள்ளிக்கிழமை அவர் கூறியதாவது:-

சர்வதேச பிரச்சினைகளுக்கு தீர்வு காண இராணுவ பலத்தைப் பயன்படுத்தக்கூடிய அச்சுறுத்தும் சூழ்நிலை இப்போது நிலவுகிறது. ஆனால், எந்த விதமான தகராறாக இருந்தாலும் பேச்சு மூலமும் சர்வதேச சட்டப்படியான ஒத்துழைப்பின் மூலமும் மனித உரிமைகளை மதிக்கும் வகையிலும் பொருளாதார வளர்ச்சியின் மூலமுமே தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தி வருபவர் கார்ட்டர்.

1977இல் இருந்து 81வரை அதிபராக இருந்த கார்ட்டர், இஸ்ரேல் - எகிப்து இடையிலான தகராறை காம்ப் டேவிட் உடன்பாட்டின் மூலம் தீர்த்தார். நோபல் பரிசு பெறுவதற்கான பெரும் சாதனையாக அதைக் கருதலாம்.

பல நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளை தீர்க்க கடந்த 20 ஆண்டுகளாக, அவர் நிறுவிய கார்ட்டர் சென்டர் மூலம் அயராது பாடுபட்டு வருபவர். மெக்ஸிக்கோ, பெரு, நிக்கரகுவா, வெனிசுலா, கிழக்குத் திமோர் உள்ளிட்ட பல நாடுகளில் தேர்தல் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார்.

ஏழை நாடுகளில் பரவும் நோய்களை ஒழிக்கவும், அந்நாடுகள் வளர்ச்சி அடையவும் அவர் பாடுபட்டுள்ளார் என்றார் கன்னர்பெர்ஜ். (ம)


ஜிம்மி கார்ட்டர் கடந்த மே மாதம் கியூபாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்குள்ள எய்ட்ஸ் நிலையம் ஒன்றுக்கு சென்ற அவர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருத்தியை அணைத்து ஆதரவு தெரிவிக்கும் காட்சி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது கிராமத்தைச் சேர்ந்தவர்களான

**திரு. இரத்தினம் மோகனதாஸ் B.B.A (MS)**
**செல்வி அருணோதயராஜா பிரிந்தினி B.F.A (Hons)**
**செல்வி ஐயாத்துரை சாமினி B.F.A (Hons)**
**செல்வி ஐயாத்துரை சர்மினி B.F.A (Hons)**

*ஆகியோரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

'தமிழ் ஒளி'
சனசமூக நிலையத்தினர்
உடுவில், சுன்னாகம்

(9334)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தினால் இன்று நடத்தப்படும் பொது பட்டமளிப்பு விழாவில் எமது புவியியல் ஆசிரியரான,

**திரு.பா.செந்தில்குமரன்**
*(குமரன்)*

அவர்கள் B.A.(Hons) in Goe. என்னும் பட்டம் பெறுவதைப் பாராட்டி வாழ்த்தி மேலும் பல கல்வித் தகைமை பெற்று நாட்டிற்கு சேவையாற்ற இறை ஆசிகள் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

*A/L 2000 மாணவர்கள்:*
செ.மைதிலி, செ.தேவகி,
இ.கோமதி, ப.கௌதமி,
பா.துஷ்யந்தி.

(9302)



# ஆசிரியர் தினம்

இடம் : சென்.ஜோன்ஸ் கல்லூரி
நாள் : புதன்கிழமை
திகதி : 16.10.2002
நேரம் : 10.30 a.m.

எமது பழைய மாணவர் சங்கம், சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்களை இத்தினத்தில் பாராட்டி வாழ்த்தவுள்ளது. பெற்றோர், நண்பர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் யாவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பழைய மாணவர் சங்கம்
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(9392)



# மக்கள் வங்கி

மக்கள் வங்கி யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளை

**மீட்கப்பெறாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை**

மக்கள் வங்கி யா/ஸ்ரான்லி வீதிக் கிளையில் 31.07.2001 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 16.11.2002 அன்று முற்பகல் 9.30 மணிக்கு யா/ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம். (சி-24197)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது விஞ்ஞானபீட மாணவன்
**ஜெகானந்தனின்**
அன்புத்தந்தை
**அமரர்**
**வேலுப்பிள்ளை கந்தையா**
அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்:
2000/2001 கல்வியாண்டு
விஞ்ஞானபீட மாணவர்கள்
யாழ்.பல்கலைக்கழகம்

(9389)


## மிருசுவில் பகுதியில் மீளக்குடியமர்வு

தென்மராட்சி,ஒக்.13

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் 110 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை மிருசுவில் புனித நீக்கிலாஸ் தேவாலயத்தில் கூடியிருந்த இக்குடும்பங்களை 521ஆவது படையணியைச் சேர்ந்த படை அதிகாரிக்கும் இப்பகுதி கிராம அலுவலரும் அழைத்துச்சென்று மீளக்குடியமர்த்தினர்.

இப்பகுதியில் உள்ள ஐந்து வீடுகளில் படையினரின் உடைமைகள் உள்ளதால் அவற்றினை அகற்றும் வரை இவ்வீடுகளில் மீளக்குடியமர வேண்டாமெனப் படை அதிகாரி தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள 196 வீடுகளில் தற்போது 136 வீடுகளில் மக்கள் மீளக்குடியமர முடியுமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-117)

## கெற்பேலியில் சங்கக்கிளை

கொடிகாமம்,ஒக்.13

கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கிளை ஒன்று இன்று கெற்பேலியில் திறக்கப்படவுள்ளது.

கெற்பேலி வாசிகசாலைக்கு அருகில் உள்ள கட்டடத்தில் மேற்படி கிளை இயங்கும் என கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் எஸ்.யோகராசா தெரிவித்தார். (எ-ரி)

## பரிசில் நாள்

யாழ்ப்பாணம்,ஒக்.13

கோப்பாய் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

கோப்பாய்க் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-180)

## நல்லூர் லயன்ஸின் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ, கண் பரிசோதனை முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களான ஜி.பிரதீப்குமார், கே.லோகநாதன் மற்றும் மருத்துவ பீட மாணவர்கள் இந்த முகாமை நடத்தவுள்ளனர்.

செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இந்த முகாமை நடத்த அனுசரணை வழங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

## வல்லையில் மிதிவெடியில் சிக்கி பசு காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

வல்லை இராணுவமுகாமை அண்டிய பகுதியில் மேய்ச்சலுக்குச் சென்ற கறவைப் பசு ஒன்று மிதிவெடியில் சிக்கி வலது முன்னங்கால் முழங்காலுக்குக் கீழ் இழந்து காயமடைந்தது.

நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் நடக்க முடியாத நிலையில் அவ்விடத்திலேயே பசு மாடு படுத்துள்ளது. (ம-15)


**ஜோ - எகட்டனின் ஜெசித்தாரா**
வழங்கும்
* தாந்தோரி புரியாணி - சிக்கன்
* குங்குமப்பூ புரியாணி - சிக்கன்
சுடச்சுட உணவுப் பெட்டிகளில்
**விலை 125/- மட்டுமே.**
வழமையான உணவுப் பொதிகள்
நண்பகல் 12மணிமுதல் 3மணிவரை.
* மகளுக்கு வெளியே ஒரு மனை
**ஜெசித்தாரா**
18/3, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
முன்ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(9355)



# நடனவகுப்பு ஆரம்பம்

எதிர்வரும் 15.10.2002 விஜயதசமி தினத்தன்று நடனவகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

ஆசிரியர் : K.கிருஷ்ணரூபினி
இடம் : கண்ணா வீடியோ சென்ரர், உடுவில்.
நேரம் : மாலை 3.30 மணிக்கு

சேரவிரும்புவோர் முன்கூட்டியே தொடர்புகொள்ளவும். (9368)



# இரண்டாவது வருட நினைவலைகள்



*அராலி மத்தி, வட்டுக்கோட்டை.* (9224)

வீரவேங்கை
புகழ்நிலா / இசைவாணி
(சாட்டுணணியமூர்த்தி எழிலரசி)

தோற்றம் 29-08-1973
மறைவு 13-10-2000

என்றும் உன் நினைவுடன்
வாழும் உன் உறவுகள்

- குடும்பத்தினர்.



# நான்காண்டு காலம்....



மலர்வு 22 - 10 - 1978

உதிர்வு 13 - 10 - 1998

## அமரர் ஸ்ரீஸ்கந்தராஜா சுகந்தினி

(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி)

முத்துச்சிமிழே! முழுநிலவே!
முல்லைமலரே! கனியமுதே!
கோலமயிலே! பூங்குயிலே!
கொஞ்சுங்கிளியே! தேன்சுவையே!

நெஞ்சம் குளிர வந்த
நேசத் தாமரையே!
உள்ளம் களிக்க வந்த
ஊஞ்சலாடும் மல்லிகையே!

இல்லம் சிறக்க வந்த
இதய ரோஜாவே!
எண்ணம் இனிக்க வந்த
எங்கள் கலைமகளே!

நினைவோடும் நனவோடும்
நீண்டபெரு மூச்சோடும்
நான்காண்டு காலம்
நாம்வாழ்ந்த துயர் போதும்!

இன்னுமேன் மௌனம் அம்மா!
எங்கள் முகம் பாருமம்மா!

உன்னை இழந்தாலும் உன் நினைவுகளினை இழக்கமுடியாத
பெற்றோர், சகோதரர், உறவினர், நண்பர்கள்,
உன்னை நேசிக்கும் உள்ளங்கள்.

(சி-24177)


# மரண அறிவித்தல்

## திருமதி குமாரசாமி சிவபாக்கியம்

காரைநகர், வலந்தலை நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் வசித்தவரும் தற்போது பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி சிவபாக்கியம் அவர்கள் 09.10.2002 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு - நாகம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற தம்பையா - வள்ளியம்மை தம்பதியினரின் மருமகளும் குமாரசாமியின் (குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் சிவகுமார் (எஸ்.எஸ்.என்ரபிறைசஸ்), சிவமலர் (அமெரிக்கா), திருவரன் (புள்ளிவிவரத் திணைக்களம் - கொழும்பு), சுரேஸ்குமார் (கனடா), விமலகுமார் (குமாரசாமி அன் சன்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதா, உதயகுமார் (அமெரிக்கா), வரதப்பிரியா, துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், இராசலட்சுமி (கனடா), இராசதுரை ஆகியோரின் சகோதரியும் மெதுஷன், கஜன் (அமெரிக்கா), காருண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று(13.10.2002) ஞாயிறு காலை 7.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் 9 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11A, பொஸ்வல் பிளேஸ், வெள்ளவத்தை,*
*கொழும்பு 06. 501185, 360659* (9350)

தகவல்:
த.குமாரசாமி.

உதயன்

# எல்லை மீறுவதற்கு முன்னர் கிள்ளி எறியுங்கள்....!

திருக்கோவில் காஞ்சிரங்குடாப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற பெரும் மனிதப் படுகொலையைக் கண்டித்து திருகோணமலை நகரில் நேற்றுமுன்தினம் அமைதி வழியில் - அஹிம்சை முறையில் - ஹர்த்தால் அனுஷ்டிக்க முயன்றோர்மீது வன்முறை கட்டவிழ்ந்து விடப்பட்டிருக்கின்றது; கிரனேட் வீசப்பட்டுள்ளது; துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கொடூரத்தில் அப்பாவித் தமிழ் பொதுமக்கள் மூவர் உயிரிழந்திருக்கின்றார்கள்; 35 பேர் வரை காயமடைந்திருக்கின்றார்கள்.

அங்கு படுகொலையுண்டவர்கள், காயமடைந்தவர்கள் அனைவரும் தமிழர்களே.

தாக்குதல் நடத்தியோர் பெரும்பான்மையினர். அவர்களில் ஒருவர்கூட காயப்படவில்லை.

ஹர்த்தால் விடயத்திலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போதும் திருகோணமலைத் தமிழர்கள் எவ்வளவு தூரம் பொறுமையைக் கடைப்பிடித்தார்கள், பொறுப்புணர்வோடு நடந்து கொண்டார்கள் என்பவற்றை உறுதிப்படுத்த இந்தப் புள்ளிவிவரத் தகவல் ஒன்றே போதும்.

ஈழத் தமிழரின் சந்ததி சந்ததியான - பரம்பரை பரம்பரையான - தாயகம் திருகோணமலை. தமது தமிழ்ப் பிராந்தியத்தின் தலைநகராகத் தமிழர் கருதுவதும் அதைத்தான்.

அண்மைக்காலத்தில் பேரினவாத சிங்கள அரசுகள அங்கு மேற்கொண்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காரணமாக ஈழத்தமிழர்களின் திருகோணமலைத் தாயகம் பறிக்கப்பட்டு வந்திருக்கின்றது; தமிழர்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டு வந்துள்ளது.

திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியதுபோல ஏறத்தாழ 99 வீதம் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த ஆயுதப் படையினரும் ஏறத்தாழ 95 வீதம் பெரும்பான்மைச் சமூகத்தைக் கொண்ட பொலீஸ் துறையும் அங்கு தமிழ் மக்களுக்குத் தேவையான பாதுகாப்பைத் தரும் நிலையில் இல்லை.

மாறாக, ஈழத் தமிழரின் தாயகத் தலைநகரை கபளீகரம் செய்ய முனைந்து நிற்கின்ற பேரினவாதத்துக்குத் துணைபோகும் ஊக்க சக்தியாகவே படையினரும் பொலீஸாரும் இருந்து வருகின்றார்கள் என்பது கண்கூடு.

அந்தப் போக்கின் ஒரு வெளிப்பாடே நேற்றுமுன்தினம் தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பேரினவாத வெறித்தனம்.

திருக்கோவில், காஞ்சிரங்குடாவில் அதிரடிப்படையினரின் அடாவடித்தனத்தை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் நடத்தியோர்மீது அதிரடிப்படையினர் கண்மண் தெரியாமல் சுட்டியிருக்கின்றனர்.

அதைக் கண்டித்து திருமலையில் அமைதி வழியில் ஹர்த்தால் நடத்தியோர்மீது கிரனேட் வீசப்பட்டு, துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சம்பவங்கள் எதனைக் காட்டுகின்றன?

தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. குறிப்பிட்டிருப்பதுபோல, தற்போது புலிகள் மேற்கொண்டுவரும் யுத்தநிறுத்தம் கோழைகளுக்கு வறட்டுத்தனமான உற்சாகத்தைத் தந்திருக்கின்றது. அவற்றின் வெளிப்பாடே இத்தகைய தாக்குதல்கள், அதனையே இத்தாக்குதல்கள் காட்டுகின்றன.

காஞ்சிரங்குடாவில் அசம்பாவிதத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமான ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அடிப்படை என்ன?

நிராயுதபாணிகளாக அரசியல் பணியாற்ற வந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள்மீது, அதிரடிப்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியதே அதற்குக் காரணம்.

இத்தகைய தாக்குதல் நடவடிக்கைக்கு அதிரடிப் படையைத் தூண்டியது எது?

யுத்த நிறுத்தத்தால் கிடைத்த வறட்டுத்தனமான உற்சாகம்தான்.

யுத்தநிறுத்தத்தால் கிடைத்த சமாதான சூழ்நிலையை அரசு நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றது.

ஆனால், அரசின் பாதுகாப்புப் படையோ, யுத்தநிறுத்தம் காரணமாகப் புலிகள் திருப்பித் தாக்கமாட்டார்கள் என்ற வறட்டுத்தனமான உற்சாகத்தில் அந்தச் சமாதானச் சூழ்நிலையை ஆங்காங்கே புலிகள்மீது தாக்குதல் நடத்தி வேடிக்கை பார்க்கப்பயன்படுத்துகின்றது.

அரசுப் படைகள் மற்றும் பொலீஸாரின் இத்தகைய போக்குத், தொடர்ந்தால் அது சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைத்து விடும்; விரும்பத் தகாத விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

எனவே, தனது படைகள் மற்றும் பொலீஸாரின் இத்தகைய போக்கை முளையிலேயே கிள்ளிவிட அரசு முயற்சிக்க வேண்டும். எல்லை மீறிய பின் கிள்ளி எறிய முயல்வது பலன்தராமல் போய்விடும்.

# இலங்கை - அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் பரிசீலிக்கப்படுகின்றது என்கின்றார் பிரதமர்

கொழும்பு,ஒக்.13

அமெரிக்காவுக்கும் - இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது தொடர்பாக அரசு பரிசீலனை செய்துவருகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தகவல் வெளியிட்டுள்ளார்.

சர்வதேச வெளியுறவு மற்றும் அணிசேராக் கொள்கைகளுக்கு குந்தகம் ஏற்படாத வகையிலே இந்த ஒப்பந்தம் அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலிமாவட்ட எம்.பியான வண.பத்தேகம சமித்த தேரர் கடந்த வியாழனன்று நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் வகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அமெரிக்க வல்லரசு, இலங்கையின் வான்பரப்பு, விமானத்தளம், துறைமுகங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக அமெரிக்காவிடம் இருந்து இராணுவ உதவிகளைப் பெறுவதற்கான உடன்படிக்கை ஒன்றைச் செய்யப்போவதாக அறிகின்றோம். அமெரிக்கா காலடி வைக்கும் எந்த ஒரு நாட்டு மக்களும் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. எனவே, நமது நாட்டின் இறைமைக்கும் இந்த விடயம் அச்சுறுத்தலாகவே அமையும். ஆகவே, இந்த ஒப்பந்தம் குறித்தும் பிரதமர் தெளிவுபடுத்த வேண்டும்" - என பத்தேகம சமித்த தேரர் கோரினார்.

இக்கேள்விக்குப் பதில் அளித்துப் பேசியபோது பிரதமர் கூறியதாவது:-

"நாம் நாட்டின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்தி உள்ளோம். முப்படைகளையும் ஸ்திரப்படுத்த வேண்டிய கட்டப்பாடு நமக்கு உண்டு.

"படைகளுக்குத் தேவையான உபகரணங்கள், தளபாடங்கள மற்றும் வைத்திய உபகரணங்கள் என்பன அத்தியாவசியத் தேவைகளாக அமைந்துள்ளன. அதேவேளை, குறைந்த விலை யில் கூடுதலான பொருள்களை வாங்கவேண்டிய கட்டாயத்தில நாம் இருக்கின்றோம்.

"இதன் அடிப்படையிலேயே அமெரிக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளோம். எனினும், நாம் அணி சேராக் கொள்கையில் இருந்து விலகிச் செல்லமாட்டோம்" - என்று பிரதமர் பதில் அளித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கீடு செய்த ஜே.வி.பி. உறுப்பினா சுனில் அந்துன்னெத்தின இடைக்கேள்வி ஒன்றை எழுப்பினார்.

"அமெரிக்கா இப்போது ஈராக்மீது தாக்குதல் நடத்தத் தயாராகின்றது. இவ்வேளையில், எமது இராணுவத் தளங்களையும், விமானத்தளம் மற்றும் துறைமுகங்களையும் அமெரிக்கா பயன்படுத்த அனுமதிப்பீர்களா?"

"உங்களுடைய கேள்வி இப்போது பொருத்தமற்றதாகும். இன்னும் ஒப்பந்தமே செய்யப்படவில்லை" - என பிரதமர் பதில் அளித்தார்.

(ம)

# அதிகாரிகளின் அசமந்தத்தால் கொழும்பில் மாணவர் திணறல்!

கொழும்பு,ஒக்.13

10ஆவது தேசிய பாடசாலைகள் விளையாட்டு விழாவின் தாமதத்தை சரியாக பாடசாலைகளுக்கு அறிவிக்காததால் தூர இடங்களில் இருந்து வந்த பாடசாலை மாணவ, மாணவிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

இவ்விழா ஒக்ரோபர் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என முன்னர் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் தவிர்க்க முடியாத காரணத்தினால் 11ஆம் திகதிக்கு (நேற்றுமுன்தினம்) மாற்றப்பட்டது.

ஆனால், இத்திகதி மாற்றம் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்கவில்லை.

அதனால் அப்பாடசாலைகளின் போட்டியாளர்கள், ஆசிரியர்கள் ஒக்ரோபர் 10ஆம் திகதியே கொழும்புக்கு வந்துவிட்டனர்.

இதனால் பாடசாலை மாணவ, மாணவியருக்கு தங்க இடம் இல்லாமல் சுகததாச விளையாட்டு மைதானத்தின் முன்னால் தங்க வேண்டியநிலை ஏற்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தோரும் இவ்விதம் பாதிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து முதலில் கொழும்புக்கு வந்த சில பாடசாலை மாணவ, மாணவியருக்கு மாத்திரம் விளையாட்டு அரங்கக் கட்டடத்தில் தங்க இடம் கொடுக்கப்பட்டதென சுகததாச விளையாட்டு அரங்கின் நிர்வாகி தெரிவித்தார்.

இதேவேளை, 4 நாள்களுக்கு மாத்திரம் போதுமான வசதிகளுடன் கொழும்புக்கு வந்தோர் மேலும் நெருக்கடியை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிகமாக ஒரு நாள் இங்கு தங்கவேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும்.

அதிகாரிகளின் அசமந்தத்தால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது எனப் பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகள் தெரிவித்தனர். (ஒ)

## பிளாஸ்ரிக் ரவையுடன் வந்த இளைஞன் முகமாலையில் கைது!

தென்மராட்சி,ஒக்.13

முகமாலை சோதனை நிலையம் ஊடாக பயன்படுத்தப்படாத பிளாஸ்ரிக் ரவை ஒன்றை எடுத்துவந்ததாகக் கூறி ஒருவரை பொலீஸார் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

கிளிநொச்சியில் நடைபெற்ற மகளிர் எழுச்சி தின விழாவுக்குச் சென்று திரும்பிய இளைஞரிடமே இந்த பிளாஸ்ரிக் ரவை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் -

மகளிர் எழுச்சி விழாவில் மன்னம்பெரும்முகாம் தாக்குதல் சம்பவத்தின் மாதிரிச்சமர் பொதுமக்களுக்கு நடத்திக் காண்பிக்கப்பட்டபோது அங்கு கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட பிளாஸ்ரிக் ரவையையே இளைஞர் எடுத்துவந்ததாகவும் - கூறப்படுகிறது. மானிப்பாய், கட்டுடையைச் சேர்ந்த நாகராஜா ஜெயக்குமார் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.(ஒ-117)

## பட்டமளிப்பு விழாவின் கலைநிகழ்ச்சிகள் நாளை

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவையொட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவிருந்த கலைநிகழ்ச்சிகள் ஒருநாள் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சிகள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12.30 மணிவரை கைலாசபதி கலையரங்கில் நடைபெறுமென பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

## படகினுள் நீர் புகும் நிலையில் தொடரும் பயணச் சேவை

நெடுந்தீவுப் படகுச் சேவையில் ஈடுபட்டிருந்த பல நோ.கூ. சங்கப்படகு சமுத்திரதேவா பழுதடைந்ததைத் தொடர்ந்து மேற்படி சங்கத்தின் மற்றும் ஒரு படகான உதயதாரகை பயணச் சேவையில் ஈடுபட்டுள்ளது.இப்படகுக்குள் கடல்நீர் உட்புகுந்தவண்ணம் இருப்பினும் போக்குவரத்துச் சேவைக்கென வேறு படகுகள் இன்மையால் பயணிகள் இதில் பயணிக்க வேண்டியது அவசியமாகிறதுமிகக் கூடுதலான பயணிகளை ஏற்றிக் கொண்டு கடல்நீர் உட்புகும் நிலையில் படகுப் பயணச் சேவை நடைபெறுவதால் பொதுமக்கள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.(ஒ-111)

## டென்மார்க் அரசின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் தகவல் வள பயிற்சிமையம்

டென்மார்க் அரசின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக் கழகமும், யுனெஸ்கோ நிறுவனமும் இணைந்து நடத்தும் 'தகவல் வள பயிற்சி மையம்' எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இலங்கை, இந்தியாவுக்கான டென்மார்க் தூதுவர் எஸ்ரேன் பேர்க், பல்கலைக்கழக சிற்றி ஹோலில் சம்பிரதாய பூர்வமாக மேற்படி பயிற்சி மையத்தை ஆரம்பித்துவைப்பார்.

யாழ்பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் பிரிவின் இணைப்பாளர் பேராசிரியர் ஆர்.சிவச்சந்திரன் மேற்படி பயிற்சி நிலையத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றுவார் என்று துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இவ்வாறான தகவல் மையத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்று குடாநாட்டிலுள்ள பத்திரிகையாளர் சிலர் விடுத்த கோரிக்கையைப் அடுத்து ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் முயற்சியின் பயனாகவும் இத்திட்டம் ஆரம்பிக்கப் படுகின்றது என்றும் - துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

(ஏ-5)

**நாளை**

புரட்டாதி 29
செவ்வாய்க்கிழமை
(15.10.2002)
திதி : தசமி
பின்னிரவு 4.51 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
முன்னிரவு 7.45 வரை
விஜயதசமி நாள்
கேதாரகௌரி விரதம் ஆரம்பம்
சுபநேரம் : 10.32 - 12.02
ராகுகாலம் : 3.02 - 4.32
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்றொருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒரு போதும் கேட்டுக் கொண்டிருக்காதீர்கள்.

## கைத்தொழில் சம்மேளனத்தின் கலந்துரையாடல் இன்று

குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை சிறு கைத்தொழில் சம்மேளனத்தைச் சேர்ந்த 16 வர்த்தகர்கள் அடங்கிய குழுவினர் குடாநாட்டு வர்த்தகப் பிரமுகர்களையும், சிறு கைத்தொழிலாளர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

யாழ். ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வடபிராந்தியத்தின் சிறிய, நடுத்தரக் கைத்தொழில் நிறுவனங்களை இணைத்து சங்கமொன்றை நிறுவுவதே இச்சம்மேளனத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சிறுகைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிகள், தேவையான உதவிகள் குறித்து இன்றைய கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாக சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன. இக்கலந்துரையாடல் நேற்றுக்காலை 9.30 மணிக்கு இடம்பெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## உடுப்பிட்டி அ.மிஷன் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.13

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. அமெரிக்க மிஷனரியால் 1852 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இக்கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் அ.துரைராஜா, அணுசக்தி விஞ்ஞானி அமரர் க.கந்தையா, உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் பொன். ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் அடங்குவர்.

இக் கல்லூரியின் கல்விச் சேவையை அங்கீகரிக்கும் வகையில் எதிர்வரும் 19 ஆம் திகதி 4 ரூபா 50 சதம் பெறுமதியுடைய நினைவு முத்திரையை அஞ்சல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

# COLOMBO INN

தலைநகர் கொழும்பில் canteen உட்பட சகல வசதிகளுடன் கூடிய தங்கும் ஸ்தாபனம்:

**கொழும்பு இன் லொட்ஜ் (விடுதி)**

COLOMBO INN 15, சங்கமித்த மாவத்த,
T.P.: 334914, 454450 (9360) கொழும்பு - 13.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுபவர்களான

**செல்வி றட்னேஸ்வரி இராசையா**
B.A. (Hons, Geo.Spl.)

**செல்வி சுதாஜினி திருநாவுக்கரசு**
B.Com. (Hons, Acc.Spl.)

இவர்கள் இருவரும் கல்வியில் மேன்மேலும் பல உயர்வுகளைப் பெற்றுச் சீரோடுஞ்சிறப்போடும் வாழவேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றுகின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (9345)

செல்வி கு.சுகர்ணா
செல்வி கு.நிஜாளினி

## வாழ்த்துகின்றோம்



இன்று கௌரவ கலாநிதி பட்டம் பெறும் எமது நிறுவன தவிசாளர்

**அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை**

பட்டயக் கணக்காளர் அவர்களை
மேன்மேலும் பல சேவைகள் செய்து
பல்லாண்டு காலம் வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

No.555, NAVALAR ROAD,
JAFFNA. (9295)

STAFF
CONSULTANCY & FINANCE & DEVELOPMENT LTD.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பணியாளர் தோழர் **திரு.த.ஆனந்தநடராசா**
(நல்லூர் ப.நோ.கூ.சங்க காசாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி தம்பு பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
(9388) கிளை - நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
-
05
-
1926



மறைவு
24
-
09
-
2001

அமரர்

**சின்னையா நல்லதம்பி**

திதி: அட்டமி 13.10.2002

ஓராண்டும் வந்ததோ உந்தனைப் பிரிந்து
உள்ளத்தில் உம்நினைவு எமை வாட்டுகின்றதே!
தீராத கவலையுடன் அவனியில் நாம் வாழ்கின்றோம்
மாறாது உம்நினைவு; மறக்காது உம்முகம்!

நிரந்தரமுகவரி:
அம்மன் கோவிலடி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

தற்காலிகமுகவரி:
புது வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (9332)

## கோவிலாக்கண்டி கடலில் தளபாடங்கள் மீட்பு

தென்மராட்சி,ஒக்.13

கோவிலாக்கண்டி கடலில் பெருமளவு தளபாடங்கள் மீன்பிடிக்கச் செல்வோரால் மீட்கப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

மேற்படி கடலில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பின்னர் மீன்பிடிக்க வள்ளங்களில் சென்ற கடற்றொழிலாளர்கள் மீன்களைவிட கடலுக்குள் காணப்பட்ட தளபாடங்களைக் கூடுதலாக எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் முறைசாராக் கல்வி மற்றும் சான்றிதழ்ப் பயிற்சியான கணனிக் கல்வி பயின்று இதுவரை சான்றிதழ்கள் பெறாதுள்ள பயிற்சியாளர்களை சான்றிதழ வழங்குவதுபற்றிக் கலந்துரையாட நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் ஒன்றுகூடுமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (எ-3)

## ஏ.ஆர்.வி. ஏற்றத் தவறிய வயோதிபர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,ஒக்.13

மூன்று மாதங்களுக்குமுன் விசர் நாயினால் கடியுண்டு அதற்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்தை ஏற்றத் தவறிய வயோதிபர், அதனால் ஏற்படும் விசர்நாய்க்கடி நோய்க்காளாகி உயிரிழந்தார். கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சபாபதி சிவகுரு (வயது70) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (எ-15)


### விண்ணப்பப் படிவங்கள்

அமெரிக்கா விஸா முடிவுநாள் நெருங்குகிறது. விரையுங்கள்! விண்ணப்பப்படிவம், அறிவுரைகள், அச்சடித்த அனுப்பும் என்வலெப் 50/=, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் தமிழ் மொழிமூல குடும்பநல மாதர் உத்தியோகத்தர் ஆள் சேர்ப்பு படிவமும் விவரமும் 17/=, Kotahena தபாற்கந்தோருக்கு மணியோடர் அனுப்பவும்.

LOTUS ADVERTISING
5-1/21, Kotahena Market,
Colombo - 13.
(C/24182) Tel.: 440708.

### VITROS DT60 II BIO CHEMISTRY ANALYSER

விட்ரோஸ் DT 60 II இரசாயன ஆய்வு இயந்திரம், அமெரிக்கா ஜொன்சன் அண்டு ஜொன்சன் கிளினிக்கல் டயக்நொஸ்டிக் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது.
தன்னிச்சையாக (automatic) இயங்கி இரத்த ஆய்வுப் பெறுபேறுகளைத் துரிதமாகத் (60 tests / hr) தரக்கூடியது.
35 விதமான இரத்த இரசாயன ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடியது.
மேலும் விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:
T.P.: 071-774144, 01-564365. (சி/24179)


## வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் திருப்பணி நிதி

வன்செயலால் பாதிப்படைந்த மேற்படி ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தின் பெயரில் நிதி சேகரிப்பதற்கு தனியார் எவருக்கும் அனுமதியளிக்கப்படவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிதியுதவி செய்யவிரும்பும் அடியார்கள் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் பரிபாலன சபை கணக்கு இல.: 1529, மக்கள் வங்கி, முல்லைத்தீவு என்னும் கணக்கில் இடும்படியும் அல்லது ஆலயத்தில் நேரடியாகச் செலுத்திப் பற்றுச்சீட்டைப்பெற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகின்றோம்.

(9232) ஆலய பரிபாலன சபை.

## பாராட்டுதலும் வாழ்த்தும்

சமூக சேவையினையும் நல்லியல்புகளையும் பாராட்டும் முகமாக அரசால் வழங்கப்பட்ட சமாதான நீதிவான் என்னும் கௌரவப்பட்டம்பெற்ற

**திரு.கு.அருள்நாயகம்**

அவர்களுக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் மிக உள்ளக்களிப்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வியங்காடு,
நல்லூர். (9351) நண்பர்கள்.

## 17ஆம் ஆண்டு பாதகாணிக்கை

மலர்வு
15
-
10
-
1934



உதிர்வு
13
-
10
-
1985

அமரர்

**தம்பிப்பிள்ளை திருச்செல்வம்**

*(முன்னாள் கிராமசேவையாளர், ஐயா கடை, மீசாலை)*


எம்மை உருவாக்கி உயர்வாக்கி உன்னதமாய்
உலாவவைத்த உத்தமரே! உங்கள்
உள்ளத்தில் நாம் எமது உயிர் உள்ளவரை
உறைந்துள்ளோம் என்ற உண்மையை
உணர்ந்துகொண்டு உங்கள் தொடர்பைக்
காற்றாகவேனும் எம்மில் வந்து வீசி
உறவாடவேண்டுமெனப் பணிவாக வேண்டிக்கொள்கின்றோம்.
*உங்கள் ஆத்மசாந்திக்கு ஒவ்வொரு நிமிடமும்*
*எம்பெருமானை வேண்டிக்கொள்கின்றோம்.*

தகவல்:
திருமதி யோகேஸ்வரி திருச்செல்வம்
தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (9291)

உங்கள் மறைவால் துயருறும்:
மனைவி, மகன்,
மகள் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

## நெஞ்சகலா நினைவஞ்சலி

இரண்டாம் ஆண்டு



அமரர் கந்தன் இராசு

அன்னை மடியில்
20-06-1942 ←→ 20-07-1947

இறைவன் அடியில்
05-10-2000 ←→ 14-11-1996

ஆறாம் ஆண்டு



திருமதி இராசு இராசம்மா

எங்கள் குடும்பத்தின் குல விளக்குகளே!
எங்கள் நெஞ்சம் துடிக்குதையோ உங்களை எண்ணி!
நீங்கள் எம்மிடம் விட்டுச்சென்ற பணிகளை - மீண்டும்
எங்களால் தொடர உங்கள் ஆசி வேண்டுகிறோம்!
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

தகவல்: S.இராஜேஸ்வரி
ஆதியாமலை, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்.
(9338)

| | | | |
|---|---|---|---|
| | | சனி ரா. | |
| | இராசிச் சக்கரம் | | வியா. |
| | | | |
| சந். | கே. | வெள். | சூரி. புத. செ. |

# இந்த வார இராசி பலன்

## 13.10.2002 ~ 19.10.2002

**மாற்றம்:**

பூராடம் - சந்திரன் தனுசு இராசியில் நிற்கும். அபிப்பிராய பேதம் வந்துபோகும். பொறுமை வேண்டும். மெல்ல மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் உருட்டிப்பாயும். இதுதான் இன்றைய அரசியல் பேச்சின் நிலை - நிரந்தர அமைப்பு ஏற்பட மக்கள் பிரார்த்திப்பர். பேச்சுக்கள் தொடரும். நன்மைகள் வரும அறிகுறிகள் தென்படும். மத்தியகிழக்கில் யுத்தமேகம் - வேகப்படும். எதிர்ப்புக்கள் வந்தாலும் முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கவலு அழிவுகளைச் செய்யும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

எவருக்கும் முகமனை செலுத்தி ஏதாவது கொடுத்தால்தான் இந்தக் காலத்தில் எதுவும் நடக்கும். சந்தர்ப்ப சூழ்நிலை - சரிவந்தது எனவும் எண்ண முடியாது. வீட்டிற்கு புதியபொருள்கள் வரப்பலன் உண்டு. தொழில்ஸ்தானத்தில் வாக்குக்கலக்கம் கொடுக்கும். ஓடியாடித்திரிவீர்கள். பொருள் வரவு வரும். புதிய உறவுகள் சிலருக்கு வரும். நரம்புச்சோர்வு, வயிற்றுநோ, மலச்சிக்கல் என்பன கொடுக்கும். தொழில்நுட்பத்துறை, செய்தித்துறை, கடல்துறை, மருநதுத்துறை போன்ற தொடர்பானவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு புதிய உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள் - வெள்ளி.*

### இடபம்

அனுபவம் என்ற போக்கிலும் மனித வாழ்வில் மிக உன்னதமானது. தொழில்ஸ்தானத்தில் உழைப்புக்குத் தகுந்த வருமானம் வரவில்லையே என ஏங்கும் பலரைப் பார்ப்பீர்கள் - புதிய முயற்சி அனுகூலமாகும். சகோதரத்துக்காக ஓடியாடித்திரிந்தும் பயனற்ற நிலை என மனம் கலங்குவீர்கள். பொருள் செலவு அதிகரிக்கும். பழையனமறக்க புதியவைநாடுவீர்கள். இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும். நெஞ்சுநோ, சலவருத்தம், உஷ்ண குளிர்பீடைகள் வரும். ரீ.வி. டெக், சினிமாத்துறைகள், ஹோட்டல் சந்தைத்துறை, மருத்துவத்துறை போன்ற துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள் - வெள்ளி.*

### மிதுனம்

புண்ணியவாளன் தொட்டது ஏன் துலங்குகின்றது? அலுவல்கள் நடக்க வேண்டுமாயின் இராசியானவர்களின் ஆலோசனை உதவிகளைப் பெற வேண்டும். பிறருக்கு ஆலோசனை, தாய்வழி உதவிகளால் பூரிப்பு அடைவர். அவசரத்தில் தவறுகள் விடுவீர்கள். இடமாற்றங்கள் ஏற்படும். தூரத்துச் செய்திகள் வரும். வாய்வு, வாத உளைவு, சளித்தொல்லை வந்து போகும். மாணவர்களுக்கு புதியநட்பு கிடைக்கும். செய்தித்துறை, குருத்துறை, சினிமாத்துறை தொடர்பானவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் - வியாழன், வெள்ளி (மத்தியானம்).*

### கடகம்

வீதியிலே இரகசியமாக லஞ்சம் வாங்குவதில் விதிஎன இருந்துவிடுவார்கள் சிலர். ஆனால், பலர் பொருமிக்கொண்டு இருப்பதை சிலர் அறிவர். தொழில்ஸ்தானத்தில் அயலில் உள்ளவர்கள் வீண்கலக்கத்தைக் கொடுப்பார்கள். அடிக்கடி மனமாற்றத்தைகொடுக்கும். தூரஇடத் தொடர்பு ஏற்படும். கொடுக்கல் வாங்கல்களால் மனஸ்தாபம் ஏற்படலாம். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பெரியவர்களின உதவிகள் கிடைக்கும். கை, கால் உளைவு, விறைப்பு கொடுக்கும். மன உணர்வுகள் பாதிக்கப்பட இடமுண்டு. அரசியல் துறை, சட்டத்துறை போன்ற துறையினர் நன்மைஅடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள் - வியாழன்,சனி.*

### சிங்கம்

நட்சத்திரத்தின் எழுத்துக்களுக்கும், கிரகங்களின் பலத்திற்கும் ஏற்ப அதிர்ஷ்ட எண்களில் 8 நாள்களுக்குள் பெயர் வைத்தால் நன்று. தொழில்ஸ்தானத்தில் நண்பர்கள் உதவுவார்கள். தூரத்து உறவினர் அல்லது செய்திகள் வர இடமுண்டு. பொருள்வரவு, புதிய நண்பர்கள் வரவு, இடமாற்றங்கள், புதிய பொறுப்புக்கள் என்பனவும் மாணவர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகளும் கொடுக்கும். கை, கால் உளைவு - தலைப்பாரம். காய்ச்சல், என்பனவும் - விவசாயத்துறை, குருத்துறை, அரசியல் துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன் (மத்தியானம்),சனி.*

### கன்னி

ஒரு வீடு கட்டும்பொழுது பூமியின் தன்மை - ஜாதகரின் நட்சத்திரம் இராசிக்கு ஏற்ப தாய்வாசல்களை அமைக்கவேண்டும். அந்த வாசலுக்கு நேரே எந்த வாசல்களும் அமையக்கூடாது. அமைந்தால் வீட்டுத் தலைவனுக்கு நல்லதல்ல. தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். பணவரவு அதிகரிக்கும். புதிய தொழில்முயற்சிகளைச் சிலர் செய்வார்கள். இடமாற்றங்கள் கொடுக்கும். பெற்றோர் வழி உறவினர் வருவர். அரச உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும். கிருமித்தாக்கம், சளித்தொல்லை, இடுப்புவலி என்பன வரும். எண்ணெய்த்துறை, சினிமாத்துறை, செய்தித்துறை போன்றவர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வெள்ளி, சனி.*

### துலாம்

வீடு கட்டுவது - நீள்சதுரக் காணியின் அமைப்பு வீட்டுத் தலைவரின் இராசிக்கு சாதகமாக வீட்டின் பாவனையை அமைத்தால் நன்று. தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். நண்பர்கள் உதவுவார்கள். வழக்கு வெற்றி, காணிபூமியால் நன்மைகள் கிடைக்கும். நாரிநோ, சளித்தொல்லை, இடுப்புவலி என்பன கொடுக்கும். சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் வரலாம்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வெள்ளி,சனி.*

### விருச்சிகம்

தோஷபூமியில் குடியிருப்பது, பயிர்வளர்ப்பது, விருத்தியைத்தராது. விருத்திவர தெய்வழிபாடுகளைச் செய்துவரவேண்டும். தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் வரும். புதியன வந்து பழையதைத்தள்ளும். அடிக்கடி கோபம், எவரையும் மதிகாத நிலை, குறைகூறுதல், பொருள்வரவும், செலவும் அரச ஆதரவு, கடன் தொல்லை, தூரத்து உறவினர் வருகை, உஷ்ணபீடை, கால்விறைப்பு, வயிறு, தொண்டை உபாதைகள் என்பன வரும் பலன்களாகும். சட்டத்துறை, பாதுகாப்புத்துறை, தொழில்நுட்பத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: வெள்ளி, சனி.*

### தனுசு

இடிந்த வீட்டுக் கல்லைப் பாவிக்கக்கூடாது எனச் சொல்லி பலர் சிலரை ஏமாற்றுகிறார்கள்.

## மகாதேவா ஜோதிடம்

தாய் மனைக்குப் புதுக்கல்லைப் போட்டு ஏனைய இடங்களுக்கு இடிந்த கற்களைப் பாவிக்கலாம் தானே. தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். புத்திரர், சகோதரங்கள் நன்மைகள் அடைவார்கள். புதிய இடம், புதிய பொறுப்பு என ஓடியாடித் திரிவீர்கள். செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். சளித்தொல்லை, கால் வருத்தம், தலைப்பாரம் என்பன வரும். மாணவர்களுக்கு ஏமாற்றம் வரலாம். போக்குவரத்துத்துறை, வைத்தியத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வெள்ளி, சனி.*

### மகரம்

சில விஷயங்கள் கண்ணுக்குத் தெரியும். சில விஷயங்கள் கண்ணுகுத் தெரியாது. கண்களுக்குத் தெரியாதவை தோஷங்கள். அதனால் பலருக்கு பல துன்பங்கள் பின்தொடரும். அத்துன்பத்தை தெய்வீகம்தான நீக்கும். தொழில் ஸ்தானத்தில் கண்களுக்குத் தெரியாமல் பல விஷயங்கள் கிடைக்கும். பொருள் வரவு உண்டு. பொருள்களில் கவனம், தவறுதல் ஏற்படும். நீர் வருத்தம், கால்நோ, தலை வருத்தம் என்பன வரும். உறவினர் செய்தி தருவார்கள். குருத்துறை, பாதுகாப்புத்துறை, மருநதுத்துறை போன்றவர்களுக்கு நன்மைகள் ஏற்பட இடம் உண்டு.

*அதிர்ஷ்ட நாள்கள்: வெள்ளி, சனி.*

### கும்பம்

ஒரு வீட்டின் நீளத்திலும் பார்க்க அகலம் கூடக்கூடாது. காணியின் அமைப்பு அகலத்தில் கூட்டுவதாயின் சில விதிமுறைகள் உண்டு. அதனால் சிறப்பு அடையலாம். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமை வரும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை வரும். நண்பர்கள் உதவி செய்வார்கள். வீட்டுச் செலவுகள் கட்டு மீறும். கொடுத்த பொருள் ஏமாற்றம் தரும். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். புதிய முறைகளில் நன்மை ஏற்படும். பெரியவர்களின் ஆலோசனைகள் பலன்தரும். அரசியல் துறை, குருத்துறை, சந்தைத்துறை, சினிமாத்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன் (மத்தியானம்), சனி.*

### மீனம்

பொருள் விஷயத்தில் எவரையும் நம்பமுடியாது. சந்தர்ப்பவாதிகள் சமயம் பார்த்துக் காலை வாரிவிடுவார்கள். பாதிக்கப்பட்டவர்கள் மனம் நொந்துபோகின்றார்கள். குற்றவாளிகள் எதையாவது சொலித்தப்பப் பார்ப்பது சகஜம்தான். தொழில ஸ்தானத்தில் பொருள் வரவு, தூரத்துச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் நண்பர்கள் உதவுவார்கள். கால், நரம்பு, சளி, வாய்வு வேதனை தரும். பிரயாணத்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன் (மத்தியானம்), சனி.* ★

## வீதிவிபத்துக்களில் 7பேர் படுகாயம்!

நேற்றுமுன்தினம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற விபத்துச்சம்பவங்களில் 7 பேர் காயமடைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய்ப் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் மோட்டார்சைக்கிள்களை ஓட்டிவந்தவர்களும், கோப்பாயைச் சேர்ந்தவர்களுமான ஏகாம்பரநாதன் நித்தியானந்தன் (வயது 53), பாலலிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா (வயது 39) ஆகியோரும் -

நாவற்குழிப் பாலத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்தவர்களான கரவெட்டியைச் சேர்ந்த எஸ். சிவலிங்கம் (வயது 46), சோலையைச் சேர்ந்த செ.சிவராசா (வயது 45) ஆகியோரும் -

நெல்லியடியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சைக்கிளில் சென்றவரான, துன்னாலை கிழக்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை ஜெயரட்ணம் (வயது47) மற்றும் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற விபத்தில் சுந்தரலிங்கம் விஜயரட்ணம் (வயது 62), கொக்குவிலில் இரு சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதில் துரை சுதாகரன (வயது 26) ஆகியோரே இவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

(ஏ-15)

# தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனவிரோதத்தை தூண்டி விட்டவர்கள் விசேட அதிரடிப்படையினர்

## காஞ்சிரங்குடா சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதி நிகழ்வில் மாவை எம்.பி.

அம்பாறை,ஒக். 13

விசேட அதிரடிப்படையினரின் இப்படியான அட்டகாசங்களும் அட்டூழியங்களும் இன்று நேற்று ஆரம்பித்தவையல்ல. தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் இனவிரோதத்தை மூட்டிவிட்டவர்களும் தமிழ்பேசும் மக்களின் அரசியல் இலக்குகளுக்கு வேட்டு வைத்தவர்களும் இந்த அதிரடிப் படையினர் தான்.

-இவ்வாறு கூறினார் தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு எம்.பியான மாவை சேனாதிராஜா. காஞ்சிரங்குடா சம்பவத்தில் கொல்லப்பட்ட ஏழு பேரின் இறுதி அஞ்சலிக்கூட்டம் நேற்றுமுன்தினம் திருக்கோவில் மாணிக்கப்பிள்ளையார் கோவில் முன்றிலில் நடைபெற்றது. அங்கு இரங்கல் உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது-

அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் வகையில் காஞ்சிரங்குடா அதிரடிப்படையினர் மேற்கொண்டுள்ள இந்தப் படுகொலைச்சம்பவத்தை யாரும் நியாயப்படுத்த முடியாது.

அதிரடிப்படையினரின் இந்த அட்டூழியங்கள் இன்று நேற்று நடந்தவையல்ல தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் இனவிரோதத்தைத் தூண்டிவிடுவதில் அதிரடிப்படையினர் பின்னணியில் செயற்பட்டவர்கள். தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் இலக்குகளுக்கு வேட்டு வைக்கும் வகையில் நடந்துகொண்டவர்கள் மீண்டும் அந்த முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

சமாதானத்தை இம்முறையாவது ஏற்படுத்திவிடவேண்டும் என்ற நோக்கத்தில் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்படும் இந்த வேளையில், மக்களின் ஜனநாயக போராட்டத்தின மீது அதிரடிப்படையினர் கொலைவெறிக் கூத்தாடியிருக்கிறார்கள். அதிரடிப்படையினரின் உள்நோக்கங்களுக்கு நாம் இடமளிக்கக் கூடாது. மக்களின் ஜனநாயக உரிமையினை ஒடுக்கிவிட முடியாது.

அதிரடிப்படையினரின் இந்த கூத்துக்களுக்கு எதிராக ஜனாதிபதியும் அரசும் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதிரடிப்படைக்குள் செயற்படும் இனவாத வெறியர்களை படைநிலைகளில் இருந்து மட்டுமல்ல, இந்தநாட்டை விட்டே வெளியேற்றிவிடவேண்டும் என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான சந்திரநேரு அங்கு பேசியதாவது:-

இராணுவத்தினரின் அடாவடித்தனத்துக்கு அஹிம்சைவாதிகள், ஒன்றுமறியாத அப்பாவி இளைஞர்கள் இன்று பலியாகியிருக்கிறார்கள். இந்த அடாவடித்தனம் தொடர அனுமதிக்ககூடாது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படைமுகாமில் மட்டும் மூன்று அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றிற்கு எதிராக பொதுமக்களாலும் மாணவர்களாலும் கடையடைப்புக்கள், மாணவர் போராட்டங்கள் எல்லாம் நடத்தப்பட்டன. இவற்றிற்குக் காரணம் இந்தப் படைமுகாமின் அடாவடித்தனங்களே. இப்படைமுகாமிற்குள் சிலவேளை ஜே.வி.பியினர் ஊடுருவியிருக்கலாம்.

சமாதானத்தைக் குலைக்க வேண்டும் என்ற போக்கில் அவர்கள் செயற்பட்டிருக்கலாம். அல்லது அவர்களுக்குக் கிடைத்து வந்த வருமானமும் மதிப்பும் இன்று இல்லாமற்போன ஆதங்கத்தின் விளைவாகவும் இது இருக்கலாம். அந்தப் பிரச்சினைகளை அவர்கள் தங்களிடமே வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, பொதுமக்களிடம் காட்டக்கூடாது. யுத்தம் நிரந்தரமானதல்ல. இவர்கள் தாம் நிரந்தரயுத்தம் புரியவந்தவர்களும் அல்லர் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

சமாதானம் வந்தால் யுத்தம் முடிந்துவிடும். இந்த இராணுவம் சமாதானத்துக்குரிய இராணுவமாக இருக்கவேண்டுமே தவிர அடாவடித்தனத்திற்குரிய இராணுவமாக இருக்கக்கூடாது - என்றார்.

யாழ்மாவட்ட, கூட்டமைப்பு எம்.பியான எம்.கே.சிவாஜிலிங்கம் பேசியதாவது:-

அரசு புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணத் தவறிவிட்டது.

அதிரடிப்படையினரின் ஆயுத வெறியாட்டம் அதனையே காட்டுகிறது.

இன்று புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சென்று பார்த்தால் அங்கு புலிகளை, ஆயுதங்களுடனேயோ முகாங்களையோ, நாம் காணமுடியாது. ஆனால், இங்கே அந்த நிலை இல்லை. ஆயுதப்படையினரின் தொல்லை. ஆகவே, கிழக்கு மாகாணத்திலிருந்து குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலிருந்து அதிரடிப்படையினரை அரசு வாபஸ்பெற வேண்டும். ஏனைய படைகளைக் கடமையில் ஈடுபடுத்த வேண்டும்- என்று கூறினார்.

(ம)

# கண்ணிவெடி தடைசாசனம் குறித்து புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும்

கண்ணிவெடி தடைசாசனத்தில் கைச்சாத்திடும் நோக்கம் அரசுக்கு உள்ளது. கனடாவின் ஒட்டாவா மாநாட்டில் இதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். இது தொடர்பாக புலிகள் இயக்கத்திற்கும் அரசுக்கும் இடையே பேச்சு நடத்தப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது:-

உள்நாட்டில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவதில், உள்ள முக்கிய பிரச்சினை கண்ணிவெடிகளாகும். அவற்றை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. ஆனால், எதிர்காலத்தில் கண்ணிவெடிகளைப் புதைக்கமாட்டோம் என்று முடிவு செய்யவேண்டும்.

இவ்வாறு முடிவு செய்தால் கண்ணிவெடித் தடுப்பு சாசனத்தில் கைச்சாத்திடும் வாய்ப்பு ஏற்படும். இது எமக்கு பலவழிகளிலும் பயன்தரும். குறிப்பாக எதிர்வரும் நவம்பர் மாத இறுதியில் அல்லது டிசெம்பர் மாத ஆரம்பத்தில் நோர்வே தலைநகரம் ஒஸ்லோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறும். இதில் குறைந்தளவிலான உதவிகள் பற்றிப் பேசப்பட்டாலும் நாம் பல விடயங்கள் குறித்து உதவி பெற அம்மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும் - இவ்வாறு அவர் கூறினார்.(ம)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் எமது நிலையத்தில் தமிழ் ஆசிரியராக சேவையாற்றும்

**திரு.து.நிருஷன் B.A.** (சிறப்பு)

அவர்கள் பட்டம்பெறுவதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*சிறுவர் நல்வாழ்வு நிலையம்,*
*புளியங்கூடல்.*
(9400) ஆசிரியர்கள், மாணவர்கள்.


## அல்லாரைப் பகுதியில் வெடிக்காத நிலையில் ஷெல் மீட்பு!

அல்லாரைப் பகுதியில் வீடொன்றில் இருந்து வெடிக்காத நிலையில் 122 மில்லிமீற்றர் ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்வதற்காக வன்னியில் இருந்து வந்த கிருஷ்ணானந்தம் பிரகாஸ் என்பவரது வீட்டிலேயே மேற்படி ஷெல் மீட்கப்பட்டதாக அப்பகுதிக்கான சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.ஜெயமோகன் தெரிவித்தார். (எ-ரி)

## சமூகக்கல்வி செயலமர்வு இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.13

சமூகக் கல்விப் பாடம் சம்பந்தமான செயலமர்வு திட்டமிட்டபடி இன்று காலை 9 மணிமுதல் யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என்றும் -

செயலமர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் தவறாது இதில் கலந்து கொள்ளவேண்டும் என்றும் - யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

## தொலைக்கல்வி பயிற்சி நெறி விண்ணப்பம்

கொடிகாமம்,ஒக்.13

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக்கல்வி பயிற்சி நெறி மிகவிரைவில் தென்மராட்சியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சிநெறியில் இணைந்துகொள்ள விரும்புவர்கள் தமது பெயர், விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறும் -

இவர்களுக்கான அறிமுக அங்குரார்ப்பண வகுப்பு மிகவிரைவில் தென்மராட்சியில் நடத்தப்படும் என்றும்- அவர் அறிவித்துள்ளார். (எ-ரி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*பொருளியல் பேராசிரியர்*

**உயர்திரு.**

**நாகலிங்கம் பாலகிருஷ்ணன்**

அவர்களுக்கு இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழத்தில் இடம்பெறுகின்ற 22ஆவது பொதுப்பட்ட மளிப்பு விழாவில் "கௌரவ இலக்கிய கலாநிதி பட்டம்" வழங்கப் பெறுவதையிட்டு அவரை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C/24196) தென்புலோலி தென் கருணையூர் உறவினர்கள், நண்பர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியை

**திருமதி தயாமதி ரஜீந்திரன்**

அவர்கள் இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் B.A.(Hons) Dip. in Edu. பட்டம் பெறுவதையிட்டு அவரை மனமகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்,
*கல்லூரி வீதி,* தென்மராட்சி கல்விச் சமுதாயம்.
*சங்கத்தானை, சாவகச்சேரி.* (9403)

## SPOKEN ENGLISH
## பேச்சு ஆங்கிலம்

BRIGHT NEW METHOD

**தபால்மூலம் நடைபெறும்**



*ஆங்கிலம் பேசவேண்டும்*
*என்றவிருப்பம்*
**ஆனால்...**
ஏதாவது தவறாகப் பேசி விடுவோமா
**என்ற தயக்கம், பயம்.**
மற்றவர்கள் ஆங்கில மொழியைப்
பேசும்போது புரிந்துகொள்ளமுடிகிறது
ஆனால், நாம் பேசும்போது தயக்கம்



## இது தானே உங்கள் பிரச்சினை

## கவலையை விடுங்கள்!

உங்களுக்குத் தெரிந்த சில ஆங்கிலச் சொற்களைக்கொண்டே தயக்கமின்றி மிக குறுகிய காலத்தில் ஆங்கிலத்தைப் பேச, கேட்க, எழுத, வாசிக்கக்கூடிய முறையில் மிக விந்தையான உளவியல் அடிப்படையில் எளிய முறையில், படிப்போர் அனைவரும் தம்மால் ஆங்கிலம் பேசமுடியும் என்னும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறையில் தபால்மூலம் கற்றுத்தரப்படும்.

இலகுவான ஆங்கில மொழிப் பேச்சுக்காகவா இவ்வளவு காலமும் விணடித்தேன் என நீங்களே கூறக்கூடிய முறையில் பத்தாண்டு கால கல்விப் போதனை அனுபவம் வாய்ந்தவரால் கற்றுத்தரப்படும்.

90 நாள்களில் ஆங்கில பயிற்சியை திறம்பட முடிக்கும் மாணவர்களுக்கு Diploma in English Certificate வழங்கப்படுவதோடு Business English பாடத்தையும் தொடரமுடியும்.

தபால்மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுய விலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்புகொள்ளவும்.

**APPLICATION FORM**

NAME :..............................................
ADDRESS :..............................................
விரும்பும் பாடநெறி:..............................................
(9258)

**BRIGHT BOOK CENTRE(PVT)LTD.**
S-27 FIRST FLOOR, COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX P.O.BOX NO: 162, COLOMBO - 11. TELE: 434770

# மீண்டும் யாழ்.நகரில்!

தரமான சைவ உணவு வகைகளுக்கு

## 'ஸ்ரீ நிகேதபவன்'

(விஷ்ணு விஹார்)

**163, மின்சார நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(பஸ் நிலைய எதிரில்)**

(9402)

# SRI NIGETHA BHAVAN
**VEGETARIAN RESTAURANT**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 - 12 - 1925 | 13 - 09 - 2002 |

**திருமதி**
**காருண்ணியசிவம் சிவக்கொழுந்து**

பெற்றெடுத்துப் பெயரிட்டுப் பேணி வளர்த்த உம்மக்கள்
வற்றாத சோகத்தில் வாடுகின்றோம் நாம் இங்கே
முற்றியது கடமையென முதல்வன் தாள் அடைந்து
பற்றாகப் பிடித்தீரோ பாவிகள் நாம் கலங்குகின்றோம்.
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*68/1, இராசாவின்தோட்ட லேன்,*
*யாழ்ப்பாணம்.* (9409)
பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சை விட்டு அகலாத நீங்காத நினைவுகளில்

25 ஆம் ஆண்டு ✝ இரண்டாம் ஆண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 08 - 1927 | 21 - 10 - 1977 |



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 06 - 1931 | 13 - 10 - 2000 |

விடாமுயற்சிக்கொரு வெற்றித் தந்தை
**அமரர் வினாசி பரமநாதன்**

வந்தனைக்குரியவள் எங்கள் தாய்
**திருமதி யோகம்மா பரமநாதன்**

எங்கள் கண்களின் ஓரம்
கண்ணீரின் ஈரம்
எங்கள் நெஞ்சின் ஓரம்
உங்கள் நினைவின் பாரம்

செல்வி ப.மைதினி
*இல.215, மூத்தவிநாயகர் வீதி,*
*நல்லூர் கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(9397)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# காஞ்சிரங்குடா சம்பவத்துக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில் மக்கள் போராட்டம் தொடரும்

## புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா

காஞ்சிரங்குடா சம்பவத்துக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும். இல்லாவிடில் மக்களின் சாத்வீகப் போராட்டம் தொடரும்.

காஞ்சிரங்குடா சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதானம் ஏற்படவேண்டும் என்றும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ பேசும் மக்களின் துன்ப, துயரங்கள் நீங்க வேண்டும் என்றும் எமது போராளிகளும், பொதுமக்களும் இணைந்து செயற்படுகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் மக்களைக் குழப்பி, புலிகளுக்கு எதிராகச் செயற்பட திசை திருப்பும் நோக்கில் அதிகாரப் படையினர் சமாதானக் காலங்களில்கூட மக்களை வேண்டுமென்றே தாக்கினார்கள்.

எமது போராளிகளும், காஞ்சிரங்குடா சாகாமம் விசேட அதிரடிப்படை முகாம் படையினரால் பல முறை தாக்கப்பட்டோம். எமது தலைவரினதும், தளபதிகளினதும் உத்தரவுக்காக மிக நிதானமாக இருந்து வந்தோம். எந்த முறுகல் நிலைக்கும் எமது போராளிகள் இடம் கொடுக்கவில்லை. தூய கட்டுக்கோப்புடன்தான் செயற்பட்டு வருகின்றோம்.

இச்சூழ்நிலையில்தான் எமது போராளிகளை காஞ்சிரங்குடாப் படையினர் தகாத வார்த்தைகளால் பேசியதுடன், மண்வெட்டிப் பொல்லுகளாலும் தாக்கினர். நாம் அப்போதும் பொறுமை சாதித்தோம். இதனை நேரில் கண்ட பொதுமக்கள் ஆட்சேபம் தெரிவித்துப பேரணி சென்றனர். இந்த அப்பாவிகளைச் சுட்டுக்கொன்றது கண்டிக்கதக்கது.

எமது மக்களின் உரிமைகளில் மேலும் கைவைத்தால் மேன்மேலும் மக்கள் கொதித்தெழுந்து இராணுவததுக்குத் தக்க பாடம் புகட்டுவர். இந நிலைமை இனிமேலும் ஏற்படக்கூடாது என்பதில் புலிகள் மிகக் கவனமாக உள்ளனர்.

இச்சம்பவத்துக்கு அரசு நியாயமான தீர்வு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் மக்களின் தார்மீகப் போராட்டம் இன்னும் இன்னும் தொடரும். இறந்த குடும்பங்களுக்கும் காயம்பட்ட இளைஞர்களுக்கும் விடுதலைப் புலிகள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள் - என்றார். (ம)

# காஞ்சிரங்குடா சம்பவத்தால் சமாதான நிலை குழம்பி விடாது!

## மகளிர் தின விழாவில் மட்டு. - அம்பாறை அரசியல் பொறுப்பாளர் உரை

காஞ்சிரங் குடாவில் நடைபெற்ற துரதிர்ஷ்டவசமான சம்பவம் ஒரு போதும் சமாதானத்தைக் குழப்பி விடாது அதில் நாம் உறுதியாகவுள்ளோம்.

- இவ்வாறு கூறினார் புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியல் துறைப பொறுப்பாளர் கௌசல்யன்.

கடந்த வியாழன் கல்லடி சிவானந்தா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற தமிழீழ பெண்கள் எழுச்சி தின நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

ஒரு சாதாரண மனிதன் தன் தாய் நாட்டிற்கு செய்கின்ற செயலை விட வேறொன்றும் உயர்வானது இல்லை.

தமிழீழ தேசியத் தலைவர் விடுதலைப் போராட்டத்தை ஏன் முன்னெடுத்தார் என்பதை அறிவதற்கான இறுதிக் காலகட்டம் இது.

பேச்சுக்கள் மூலம் எமது மக்களுக்கு நல்ல விடிவு ஏற்படவேண்டும். அதற்கான ஒரு சூழலை தலைவர் தற்போது உருவாக்கியுள்ளார்.

மீண்டும் யுத்தம் வெடிக்கக் கூடாது என்பதற்காக தலைவரின் கட்டளைகளை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடித்து நாம் செயற்பட்டு வருகின்றோம்.

காஞ்சிரங்குடா சம்பவம் தொடர்பாக எமக்கும் படைத்தரப்புக்குமிடையே பேச்சுக்கள் நடைபெறுகின்றன இது வேதனைப்பட வேண்டிய சம்பவம். இச் செயலை வன்மையாகக கண்டிக்கின்றோம். அங்கு தமது உயிரைத் தியாகம் செய்தவர்கள் போராட்டத்தில் மதிக்கப்பட்டு போற்றப்படுவார்கள்.

எமது போராட்டம் மக்கள் போராட்டமாக மாறிவருவது புதிய உத்வேகத்தைத் தருகிறது. அரசியல் குழப்பங்களுக்கு அப்பால் நல்ல சமூக உறவுகளை அனைத்து மக்களும் வளர்த்து ஒன்றுபட வேண்டும் என்றார் கௌசல்யன்.

மட்டு. - அம்பாறை மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பானுகா தனது உரையில் கூறியதாவது:-

பெண்களை சமூகம் மாற்றத்திற்கு கொண்டுவந்த பெருமை தமிழீழ தேசியத் தலைவரையே சாரும். தமிழர் வரலாற்றில் நடைபெறாத புரட்சிகள் இன்றைய பெண்கள் வரலாற்றில் இப்போது இடம்பெறுகின்றன.

கடந்த காலத்தில் பெண்களை குறுகிய வட்டத்தில் வைத்து அவர்களுக்கு வரையறைகள் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன.

இன்றைய நாள் பெண்ணினத்தின் விடிவு நாள். அனைத்து பெண்களும் சம உரிமைக்காக ஒருமித்துக் குரல் கொடுக்கும் நாள் - என்றார் பானுகா.

தமிழீழ பெண்கள் எழுச்சிப் பேரணி விபுலானந்த இசை, நடனக் கல்லூரி, கல்லடி சிவானந்தா வித்தியாலயம் என்பவற்றில் இருந்து கடந்த வியாழன் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகியது. பேரணியில் ஊர்திகள், பணை பாட்டு கோலாட்டங்கள் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

பேரணி, சிவானந்தா வித்தியாலய மைதானத்தை சென்றடைந்தது. அங்கு மட்டு. - அம்பாறை மகளிர் அரசியல் பொறுப்பாளர் சாமந்தி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் மாதாந்த சஞ்சிகையான 'கொண்டல்' சமூக பெண்கள் மேம்பாட்டு அமைப்பினரால் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஒ)

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்களின்

# வேட்பாளரான அரச ஊழியர்கள் மீண்டும் சேவையாற்ற அனுமதி

கொழும்பு,ஒக்.13

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில போட்டியிட நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்திருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு மீண்டும் சேவையாற்ற அனுமதி வழங்குவதென அரசு தீர்மானித்திருக்கிறது. அவர்களின் நிலுவைச சம்பளங்களை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானத்தின்படி, தற்பொழுது சம்பளமற்ற லீவில் இருக்கும் அரச ஊழியர்களான வேட்பாளர்கள், தாம் சேவையாற்றிய இடங்களுக்கு இம் மாதம் 31ஆம் திகதியன்று அல்லது அதற்குமுன் சென்று அறிவிக்கவேண்டுமென பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது.

சேவைக்கு சமுகமளிக்கும் நாள் வரையிலான - சம்பளமற்ற விடுமுறைக காலத்துக்கான - நிலுவைச்சம்பளம் அந்த ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென அமைச்சு அறிவித்திருக்கிறது. (ம)

# சாவகச்சேரி வர்த்தகர்கள் அமைச்சரிடம் கோரிக்கை

தென்மராட்சி,ஒக்.13

சாவகச்சேரிப் பகுதியில் யுத்த அனர்த்தங்களால் பெரும் நஷ்டங்களை எதிர்கொண்டுள்ள வர்த்தகர்களுக்கு இழப்பீடு கிடைக்கும்வரை இடம்பெயர்வுக்காகத் தற்காலிகமாக வழங்கப்படும் இலவச நிவாரண உதவிகளைத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவை கோரியுள்ளனர்.

பிரதேசத்தில் ஆயிரத்து 500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானமுடைய குடும்பங்களுக்கு இழப்பீடு தொடர்பான படிவங்கள் பிரதேச செயலகத்தினால் அண்மையில் வழங்கப்பட்டன. இந்த இழப்பீட்டுப் படிவங்களைப் பெற்ற வர்த்தகர்கள் படிவத்தினைப் பூர்த்தி செய்து கிராம அலுவலரிடம் ஒப்படைத்தபோது தற்போது வழங்கப்பட்டுள்ள நிவாரண முத்திரைகளை ஒப்படைத்துவிட்டு பங்கீட்டு அட்டையை 'உ' பங்கீட்டு அட்டையாக மாற்றுமாறு கிராம அலுவலர்களால் கோரப்படுகிறது.

யுத்த அனர்த்தங்களால் தொழில்களை இழந்து குடியிருப்புக்களை இழந்து நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள வர்த்தகர்கள் தமது ஜீவனோபாயத்துக்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் - வர்த்தகர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் வரை நிவாரண உதவிகளை தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யு மாறும் - புனர்வாழ்வு அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர், இந்து சமய கலாசார அமைச்சர், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருககும் அனுப்பப்பட்டுள்ளன. (ஒ-117)

## தீவகத்துக்கு நிதி ஒதுக்கீடு

காரைநகர்,ஒக்.13

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நகரக்கட்டமைப்பு, கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர் விநியோகம், சமூகநல பண்பாட்டு சேவைகள் என்பவற்றை மேற்கொள்வதற்காக இவ்வாண்டு பண்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதியில் இருந்து 40லட்சத்து 36ஆயிரத்து 655ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ஒ-73)

# கடமையில் ஏற்படும் திருப்தி குறித்து ஆசிரியர்கள் தம்மைத்தாமே எடைபோட்டுப் பார்க்கவேண்டும்

## எழுத்தாளர் சிற்பி கூறுகிறார்

சுன்னாகம்,ஒக்.13

ஆசிரியர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்கிறோமே எனத் தம்மைத் தாமே எடைபோட்டுப் பார்க்கும் நாளாக ஆசிரியர் தினம் உள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் மூத்த கல்வியியலாளரும் எழுத்தாளருமான சிற்பி சிவசரவண பவன்.

உடுவில் கல்விக் கோட்டம் நடத்திய ஆசிரியர் தினவிழா கடந்த புதனன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது:-

ஆசிரியர்கள் நல்ல பணியை ஆற்றுபவர்கள். சமுதாயம் வெளிப்படையாக அவர்களை மதிக்காது விடலாம். சிலர் குறை கூறவும் முற்படலாம். ஆனால், உலகம் ஆசிரியர்களை மதிககிறது. உலகத்தில் முன்னேறிய எல்லோருமே ஆசிரியரை மதிக்கிறார்கள்.

மதிப்பு என்பது கேட்டுப் பெறுவதல்ல. அது தானாக வர வேண்டும். ஆசிரியர்கள் தமக்குரிய மதிப்பை உறுதி செய்யும் வகையில் நடந்து கொள்ளவேண்டும்.

அத்துடன், ஆசிரியர்களிடத்தில் பணிவு இருக்கவேண்டும். அவ்வாறானவர்களை உலகமும், ஊரும், மாணவர்களும் போற்றுவர்.

ஆசிரியர்களில் பலர் சக ஆசிரியர்களை மதிப்பது குறைவு. அந்நிலை மாற வேண்டும். சக ஆசிரியர்களை மதித்து அங்கீகரிப்பது அவசியமாகும் - என்றார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தனதுரையில் கூறியதாவது:-

முன்னர் ஓரிரு பெண் ஆசிரியர்களே கடமை புரிந்தனர். இன்று 80 வீதமானோர் பெண் ஆசிரியர்களாகக் கடமை புரிகின்றனர். பெண்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். இந்தியாவின் முதலாவது கவர்ணர் ஜெனரலாக இருந்த ராஜாஜி பெண்கள் மூன்று தொழில்களில் ஈடுபடுவது அவசியம் என்பதை வலியுறுத்தினார். ஆசிரியத் தொழில், தாதித் தொழில், மருத்துவத் தொழில் ஆகியனவே அத் தொழில்களாகும்.

அன்பும், அரவணைப்பும் மிக்க பெண்களே இத் தொழில்களுக்குப் பொருத்தமானவர்கள் என்பது ராஜாஜியின் கருத்தாகும். இன்று அது நிதர்சனமாகியுள்ளது - என்றார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். நல்லாசிரியர் விருது வழங்கல், ஆக்க ஓவியப் போட்டிகளின் பரிசளிப்பு ஆகியனவும் கலை நிகழ்வுகளும் தொடர்ந்து இடம்பெற்றன. (எ-27)

# புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கை

கொழும்பு,ஒக்.13

அரச ஊழியர்களின் நலன் கருதி புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பாக கடந்த வரவு - செலவுத் திட்டத்தின்போது பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதாக ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணிப்பாளரான விக்டர் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக மத்திய வங்கிக்கும், திறைசேரி ஆணையாளர் நாயகத்துக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன. இதன் மூலம் ஓய்வூதிய நிதியம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளதாக பணிப்பாளர் சமரவீர கூறியுள்ளார். இந்த நிதியம் ஆரம்பிக்கப்படுவதனால் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் உறுதிசெய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-9)

# தேவனுடைய ஆளுகையில் நித்தியமகிழ்ச்சி தரும் மோட்சம்!

தனது செயல்கள் அனைத்தையும் அறிந்த தேவன், தாம் தெரிந்து கொண்ட நீதியின் கிரையாகிய நமக்கு ஆயத்தம் செய்துவைத்துள்ள இடம்தான் மோட்சமாகும்.

மோட்சத்திற்குச் செல்லும் மனிதனுக்குப் புதிய ஆவிக்குரிய சரீரம் கிடைக்கும். தேவ கிருபை, ஒவ்வொருவரும் செய்துள்ள நீதியான செயல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் சிறியதும் பெரியதுமான சரீரம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும்.

★ மோட்சம் என்றும் பரலோகம் என்றும் அழைக்கப்படும் இடத்தில் தேவன் வசிக்கிறார். முற்றிலும் அவருடைய ஆளுகைக்குள்ளும் பரிசுத்த பிரசன்னத்துக்குள்ளும் இவ்விடம் இருப்பதால் நித்திய மகிழ்ச்சியோடிருக்கும். மனந்திரும்புகிற ஒவ்வொரு மனிதனும் மிக அருகில் இந்தப் பரலோகராஜ்யம் இருக்கிறது. இது அவனது ஆத்துமா பரலோகத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெற அவன் மனந்திரும்புகின்ற விநாடியே தயாராகிவிடுகிறது.

மனம் திரும்பி, பாவ மன்னிப்பைப் பெறும்படியாக இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவனுடைய மாமிச சரீரமானது, மரணம் என்ற திரையைக் கடந்தவுடனேயே புதிய ஆவிக்குரிய சரீரத்தை அடைந்து தேவதூதர்களால் பரதீசு எனப்படும் இளைப்பாறும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறது.

இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாளில் அவர்கள் அவரோடு வந்து இவ்வுலகை ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர், பரலோகத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

(மத். 4:17 - 5:6-9)

★ அது தேவதூதர்களும் சந்தோஷமும் நிறைந்த இடம். நித்தியமானது. அங்கே அநேகர் வசிப்பதற்கேற்ற இடங்கள் உண்டு. அங்கே நவமான திராட்சை ரசம், ஜீவ விருட்சத்தின் கனி, அதிகாரம், நட்சத்திரம், வெண்வஸ்திரம், சிம்மாசனம், மேன்மையான உணவு ஆகியவை யாவருக்கும் கொடுக்கப்படும்.

(லூக். 15:7 - மத். 26:29 - யோ. 14:23 - வெளி. 2:7, 17,26,28 - 35, 21 - 20:6)

★ அது உலகம் உண்டானது முதல் நீதிமான்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்ட இடமாகும். (மத். 25:34) பூமியில் மனிதன் இருக்கும்போதே பரலோகத்தில் தனக்காக செல்வங்களைச் சேர்த்து வைக்கமுடியும்.

(மத். 6:20 - லூக். 12:33)

★ மனத்தாழ்மையுடன் மனந்திரும்பி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களே பரலோக ராஜ்யத்தின் பிரவேசிக்க முடியும். பரலோகத்தின் திறவுகோல்களை உடையவரும் பரலோகத்தின் வழியும், மாறாத சத்தியமும், நித்திய ஜீவனும், பரலோகத்தின் வாசலும் இயேசு ஒருவரே.

(மத். 5:3:10 - 7:21 - 18:3 - 19:14 - யோ.10.9)

★ மிகச் சிலரே பரலோகத்திற்கும், அநேகமானோர் நரகத்திற்கும்தான் செல்வார்கள் என்ற கூற்று ஒன்று உண்டு. இந்தக் கூற்றை மறுப்பவர்கள்

**ஞாயிறு நற்பிரசாதம்**

அநேகர். ஆனால், பரிசுத்த வேதாகமம் இதைத் தெட்டத்தெளிவாகக் கூறுகிறது.

(மத். 7:13,14 - லூக். 13:23,24 - சங். 49:14)

மிகச் சிலருக்கே கிடைக்கும் இந்த அற்புதமான பாக்கியத்தைப் பெற நீங்களும் விரும்புவீர்கள். அதற்கு ஒரே ஒரு வழி இயேசுவின் நாமத்தினாலேயே மனந்திரும்பி, அவரிடம் பாவ மன்னிப்பைப் பெற்று, ஞானஸ்நான அடையாளத்தை நிறைவேற்றி, அவருடைய ஆவியினாலே நடத்தப்படும் பரிசுத்தமான வாழ்வு வாழ்வது மட்டும்தான்.

இந்தச் சத்தியத்தை மீண்டும் மீண்டும் இப் புத்தகத்தில் சொல்வதற்குக் காரணம் இன்னும் மனந்திரும்பாதே, அநேகர் அடிப்படையான இந்தச் சத்தியங்களை மறந்து வேறு காரியங்களில் கவனம் செலுத்தி வருவதால்தான்.

இது மிகவும் எளிய மகிழ்ச்சியான வாழ்க்கையாகும். (யோ.10:9 - 14:6 - 15:4,5 - வெளி. 22:14) நாம் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவின் மேல் நம்பிக்கை வைத்து பாவ அறிக்கை செய்து அவருக்கு என்றென்றும் கீழ்ப்படிந்திருப்பது மட்டுமே.

மற்றவற்றை அவரே பார்த்துக் கொள்வார்.

- எலிஸா

## யாழ்.தொழில் திணைக்களத்தில்

# வேலையற்ற இளைஞர்,யுவதிகளை பதிவு செய்யும்பணி இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.13

வேலையற்ற இளைஞர், யுவதிகளை பதிவுசெய்யும் நடவடிக்கையை தொழில் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஏற்கனவே திகதி நிர்ணயிக்கப்பட்டவர்கள் மட்டும் பதிவுகளை அலுவலகத்தில் மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதிவுசெய்யவரும் இளைஞர், யுவதிகளின் அசௌகரியங்களையும், நெருக்கடிகளையும் தவிர்க்கும் முகமாக பதிவு நடவடிக்கையை பிரதேச ரீதியாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பதையடுத்தே இந்தப்பணி இடைநிறுத்தப்பட்டிருப்பதாக உதவி தொழில் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பிரதேச ரீதியாகப் பதிவுகளை மேற்கொள்வதற்கான அனுமதியை தமது தலைமை அலுவலகத்திடம் கோரியிருப்பதாகவும்-

அனுமதி கிடைத்ததும் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் பிரதேச ரீதியாக இப்பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் - அதுவரை பதிவு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் -

அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, புதிய பதிவுகளுக்காக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கும் யாழ்.மாவட்ட தொழில் திணைக்களத்துக்கு இளைஞர், யுவதிகள் வர வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை- பதிவுகளை மேற்கொள்ள முன்னதாகத் திகதி நிர்ணயிக்கப்பட்டவர்கள் மட்டும் குறிக்கப்பட்ட திகதிகளில் அலுவலகத்துக்கு சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## சமய சந்நிதிகளில்

சாவகச்சேரி,ஒக்.13

சாவகச்சேரி வாரிவனேஸ்வரம் முத்துமாரி அம்மன் ஆலய கேதார கௌரி விரத விசேட ஆராதனை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ஒ-31)

★ ★ ★

கோப்பாய்,ஒக்.13

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தினால் நடத்தப்பட்டுவரும் 63நாயன்மார் குரு பூசை வரிசையில் நாளை திங்கட்கிழமை "ஏனாதிநாத" நாயன்மார் குருபூசையும், எதிர்வரும் வியாழக்கிழமை நரசிங்க முனையனாயர் குரு பூசையும் சோமஸ்கந்த ஆலயத்தில் நடைபெறவுள்ளன. (ஒ-72)

★ ★ ★

நல்லூர் சிவன் கோவிலில் நாளை திங்கட்கிழமை காலை 7மணி தொடக்கம் சுவாசினி பூஜை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

★ ★ ★

இணுவில்,ஒக்.13

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு நடைபெறும். இந்த உற்சவ நிகழ்வு யாழ்.சேவையில் நேரடியாக ஒலிபரப்புச் செய்யப்படும்.

★ ★ ★

தென்மராட்சி,ஒக்.13

நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலவ வேண்டி மீசாலை சித்திரவேலாயுதர் ஆலயத்தில் கந்த புராணபடனம் கடந்த இரண்டாம் திகதி தொடக்கம் பாடப்பட்டு வருகிறது.

தொடர்ந்து 45தினங்கள் நடைபெறும் படன வாசிப்பு அடுத்த மாதம் 19ஆம் திகதி திருக்கார்த்திகை உற்சவத்துடன் நிறைவுபெறும். (ஒ-117)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.13

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மானம்பூ திருவிழா நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு இடம்பெறும். சிவபூதராயர் கோவிலில் இடம்பெறும் கன்னிவாழை வெட்டும் நிகழ்வைத் தொடர்ந்து விநாயகர் வீதிவலம் வருவார். (ஒ-133)

## நீர்வேலியில் வண்டிச் சவாரி

சண்டிலிப்பாய்,ஒக்.13

வன்னி மாவட்ட மாட்டுவண்டி சவாரியாளர்களின் ஏற்பாட்டில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி சவாரித் திடலில் இடம்பெறவுள்ளது. (ஐ-3)


### ENGLISH CLASSES

By:

**K.C.Sivasubramaniam**

*(Senior English Teacher)*

GRAMMAR / LITERATURE

TOFFEL / ILTS

REGISTER BEFORE 19th oct 2002

51, 1st Lane, off Brown Road, Jaffna.

(C-24189)


### ஏழாலை தெற்கு வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

மானம்பூ விழாவும் கேதார கௌரி விரதாரம்பமும்
15.10.2002 செவ்வாய்க்கிழமை

காலை 7.00 மணிக்கு அபிஷேகம்
காலை 10 மணிக்கு பூஜை
காலை 10.30 மணிக்கு சொற்பொழிவு

*நிகழ்த்துபவர்* : சிவானந்தவாரிதி குமாரசாமி ஐயா
*விடயம்* : 'மகிஷாசுர மர்த்தனி'

அதனைத் தொடர்ந்து அம்பிகை விசேட மேளக்கச்சேரியுடன் வீதியுலா வருவார். பின் பிரசாதம் கொடுக்கப்படும்.

- தேவஸ்தானம். (9419)


### Fibre glass boats available ex - stock

கல்நார் இழைப்படகு உடன் விற்பனைக்கு உண்டு. விரும்பிய வர்ணங்களில் 4 நாள்களில் செய்து வழங்கப்படும்.

**STAR INDUSTRIAL SERVICES (PVT) LTD.**

Office :- *124, Rasavinthoddam Road, Nallur, Jaffna.*
Boat Yard:-*270/6, Nayanmar Veethy, Nayanmarhattu, Jaffna.* (9415)

### தேவை

அதி நவீன புகைப்படக் கருவிகள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.

நூலகர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C-24202)


### அகமிக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்

தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர்

**செல்வி இரத்தினபூபதி முருகுப்பிள்ளை**

B.A. Hons, Dip. in Ed, M.Ed.

அவர்கள் இன்று (13. 10. 2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணிப்பட்டம் பெறுவதையிட்டு அகமிக மகிழ்ந்து பாராட்டி மேலும் பல சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

சிரேஷ்ட விரிவுரையாளர், விரிவுரையாளர்கள்.
*தேசியகல்வி நிறுவகம், யாழ்.இந்துக் கல்லூரி நிலையம்.* (9416)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய அதிபர்

**உயர்திரு. வே.பாலசுப்பிரமணியம்**

*B.A (Hons) Dip.in.Edu., P.G.D.E.M., SLPS I*

அவர்கள் இன்று நடைபெறும் யாழ். பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் M.Ed. பட்டம் பெறுவதையிட்டு பாராட்டுவதோடு அவர் மேலும் பல சிறப்புகள் பெற எமது வாழ்த்துக்கள்.

குகன் மாஸ்டர்
நிர்மலா குடும்பத்தினர்.
*இடைக்காடு* (9412)


### விற்பனைக்கு

8 H.P Yanmar
டீசல் எஞ்சின்
2K.W. டைனமோவுடன்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
மதுஷா வைண்டிங் வேக்ஸ்.
*இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.* (9411)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியரும் எமது கல்வி நிறுவனத்தின் இரசாயனவியல் ஆசிரியருமான

**திரு. ந.மகேஸ்வரன்**

அவர்கள் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல்துறையில் முதுதத்துவமாணி (M.Phil.) பட்டம் பெற்றமையையிட்டு அவரை மனம் மகிழப் பாராட்டி வாழ்த்துகின்றோம். (9410)

**BITSMANS கல்வி நிறுவன**
இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று நடைபெறும் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (சங்கீதம்) பட்டம் பெறும் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி

**பத்மா என்ஸிலி ருக்மன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா, அத்தைமார், பெறாமக்கள்.
*அண்ணா வீதி, அச்சுவேலி.* (C-24203)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நிகழும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் -

**திரு.வே.பாலசுப்பிரமணியம்**

B.A.(Hons), Dip. in Edu., PGDEM, M.Ed., S.L.P.S.I.
(அதிபர், யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)



அவர்கள் M.Ed.பட்டம் பெறுவதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். இவரை நாம் பாராட்டுவதுடன் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வியில் உயர்வடைய வேண்டுமென இறையருளை வேண்டிவாழ்த்துகின்றோம்.

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம். (9413)

O/L 2001 பழைய மாணவர்கள்.

### கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திருமதி எஸ்.சிதம்பரநாதன் அவர்களின் ஏக புதல்வி

**செல்வி சுரேகா சிதம்பரநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவித் தேர்தல் ஆணையாளரும், உத்தியோகத்தர்களும், தேர்தல்கள் அலுவலகம், யாழ்ப்பாணம். (C/24198)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் செந்தில்செல்வர்

தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் செந்தில்செல்வர் 09.10.2002 (புதன்கிழமை) ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் மயில்வாகனம் சுப்பிரமணியம் - காலஞ்சென்ற இரத்தினம் தம்பதியினரின் அன்புப் புதல்வனும் ஜேர்மனியில் வசிக்கும் சந்திரமலரின் அன்புக் கணவரும் பபி, கரன், தர்ஷினி, சசி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் கனேசநாதன் (சங்கானை), சத்திவடிவேல் (வடிவேல் வோச வேக்ஸ், யாழ்ப்பாணம்), விஜயலட்சுமி (சங்கீத ஆசிரியை, வட்டு.இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற சத்தியதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2002) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு.கணேசநாதன் (சகோதரர்),
சு.சத்திவடிவேல் (சகோதரர்).
*"மலர் வாசா" தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.* (9414)

### திருமதி முருகேசு ஆச்சிப்பிள்ளை

நீர்வேலி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு ஆச்சிப்பிள்ளை அவர்கள் நேற்று (12.10.2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகேசு அவர்களின் அன்பு மனைவியும் நாகேஸ்வரநாதன், விமலராசா, உதயகுமார், இராசகுமார் (சுவிஸ்), கருணாகரன் (கனடா), ஜெகதீஸ்வரி, பவானி, திருமகள் ஆகியோரின் அருமைத் தாயாரும் தர்மலிங்கம், பழனிராசா, குணபாலசிங்கம், லீலாதேவி, யோகராணி, இராணி, கமலாதேவி, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.நாகேஸ்வரநாதன் (மகன்)
*நீர்வேலி, சங்கானை.* (9418)

### கனடா கலாட்டா!

# விசுவை விரட்டிய புலி ஆதரவுப் புயல்!

**கனடாவில் தமது 'அரட்டை அரங்கம்' நிகழ்ச்சி நடத்தச் சென்ற நடிகர் விசுவுக்கு அங்கு ஏற்பட்ட அனுபவத்தை 'ஜூனியர் விகடன்' சஞ்சிகை வெளியிட்டுள்ளது. அந்த விவரம் இங்கு பிரசுரமாகின்றது.**

சமீபத்தில் கனடாவில் தனது 'அரட்டைஅரங்கம்' நிகழ்ச்சியை நடதத வந்திருந்த விசு அங்கு சந்தித்த எதிர்ப்புப் போராட்டம், கலைநிகழ்ச்சிகள் நடந்த கனடாவுக்குப் பறக்கும் தமிழ்க் கலைஞர்கள் மத்தியில் பெரும் பதறநத்தை உண்டாக்கியிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் கடும் எதிர்ப்பை மட்டுமல்ல, கொலை மிரட்டலையும் கூட விசு சநதிக்க நேர்ந்தது. நிலைமை மோசமானதைத் தொடர்ந்து உடனடியாக அவரைத் தங்கள் நாட்டிலிருந்து புறப்படுமாறு கேட்டுக்கொண்டது கனடா பொலீஸ்.

ஈழத்தமிழர்களின் போராட்டங்களை இழிவுபடுத்திப் பேசியதாகவும் தமிழ் உணர்வு இன்றி காசு பண்ண வந்ததாகவும் கூறி அவரது நிகழ்ச்சிகளைப் புறக்கணிக்குமாறு புலிகளின் ஆதரவு அமைப்புக்கள் அறிவித்திருந்ததுதான் இத்தனை பரபரப்புக்கும் காரணம்.

அமெரிக்காவிலும் கனடாவிலும் ஆறு லட்சம் ஈழத்தமிழர்கள் வசிக்கிறார்கள். இங்கே தமிழ்க் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக அமைய வேண்டுமானால், அதற்கு இந்த ஈழத்தமிழர்களின் ஆதரவு மிக மிக அவசியம். ஆனால், இலங்கையில் நடக்கும் தங்களின் இனப் போராட்டத்தைப் பகிரங்கமாக ஆதரிக்கும் கலைஞர்களை மட்டுமே அரவணைப்பது என்பது இவர்களது கொள்கை.

புலி ஆதரவு அறிக்கை தருவது இதுநாள் வரையில் பிரச்சினையில்லாத விஷயமாக இருந்ததால் தமிழ்க் கலைஞர்களும் இங்கே அதிரடிக் கருத்துக்களை வெளியிட்டு வெற்றிகரமாக நிகழ்ச்சிகளை நடத்திவிட்டு வந்தார்கள். ஆனால், சமீபகாலமாக புலி ஆதரவு என்றாலே 'பொடா' சட்டம் பாயும் நிலை உருவாகியிருப்பதால் இத்தகைய அறிக்கைகளைத் தரத் தயங்குகிறார்கள் தமிழ்க்கலைஞர்கள்.

கனடாவில் மொண்றியல் நகரததில் நடந்த 'அரட்டை அரங்கத்தில்' 'இங்கு யாரும் தமிழ் ஈழம் பற்றிப் பேசக்கூடாது; விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசக்கூடாது; ஜெயலலிதா அம்மாவை கண்டிக்கக் கூடாது!' என்று மூன்று முக்கிய கட்டுப்பாடுகளை விதித்திருந்தார் விசு. இதுதான் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களைச் சூடேற்றிவிட்டது.

கனடாமுழுக்க இந்தத்தகவல் பரவ, ஆங்காங்கே ஈழத்தமிழர்கள் மத்தியில் விசுவுக்கு எதிரான போராட்ட விதை தூவப்பட்டது. விசுவின் அரட்டை அரங்கத்தை கனடா முழுவதும் ஈழத்தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானமும் போடப்பட்டது.

மொண்ரியல் நகரில் நிகழ்ச்சி முடிந்து அடுத்த நகரமான ரொரண்ரோவுக்கு விசு வந்தபோது பிரச்சினை விஸ்வரூபமெடுத்தது. விசு எதிர்ப்புக் குழு என்ற பெயரில் ஒரு குழுவே தொடங்கப்பட்டு அரட்டை அரங்கம் நடத்த ஏற்பாடாகியிருந்த வின்ஸ்டன் சேர்ச் அரங்கம் எதிரில் பெரிய ஆர்ப்பாட்டமே நடந்தது. கனடாவின் விசேட பொலீஸ்படையான மௌண்டட் பொலீஸ் பாதுகாப்புடன் தான் அரங்கத்துக்குள்ளேயே விசுவால் நுழைய முடிந்தது.

எங்கள் உணர்வுக்கு மதிப்பளித்துப் பெரும்பாலான மக்கள் விசுவின் நிகழ்ச்சியைப் புறக்கணித்து விட்டார்கள். 1,500 பேர் அமரக்கூடிய பிரமாண்டமான அந்த அரங்கில், முதல் நாள் நிகழ்ச்சிக்குவெறும் 72பேர் மட்டுமே வந்தார்கள். பத்திரிகை நிருபர்கள், விசுவின் நண்பர்கள் இலவச அழைப்பு பெற்றவர்கள் என்றுதான் கூட்டம் சேர்ந்தார்கள். இவர்களில் ஈழத்தமிழர் ஒருவர் கூட இல்லை. மறு நாள் நிகழ்ச்சிக்கும் இவ்வளவு கூட்டம் தான் வந்தது. இதுவே எங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றார் 'முழக்கம்' எனும் தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரான திருமுருகவேந்தன்.

விசு எதிர்ப்புக்குழுவின் தலைவரான வேலுப்பிள்ளை தங்கவேல், "எங்கள் விடுதலை உணர்வுகளையும் தமிழ்த் தேசிய உணர்வையும் மதிக்காத தமிழ்நாட்டு கலைஞர்கள் யாரும் இனி கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து ஆகிய நாடுகளுக்குள் கால்வைக்கக் கூடாது. ஈழத்தமிழர்கள் இளிச்சவாய்கள் என்ற நினைப்பில் இனியாரும் பணத்தைச் சுருட்டிக் கொண்டு செல்வதை அனுமதிக்க மாட்டோம் என்று சொன்னார்.

விசு எதிர்ப்புக்குழுவின் செயலாளரான தர்மகுலசிங்கம் எம்முடன் பேசும் போது 'விடுதலைப் புலிகள் பற்றிப் பேசினால் 'பொடா' சட்டம் பாயும் என்பது தெரியும். ஜெயலலிதா பற்றிப் பேசினால் எந்தச் சட்டம் பாயும்? அவரைப்பற்றிக்கூட பேசக்கூடாது என்றால் எப்படி? " என்றும் கேட்டார்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவானவர்கள் என்ற இமேஜ் கொண்ட பிரபலங்களுக்கு இங்கே ராஜமரியாதை கிடைக்கிறது. சமீபத்தில் ஐங்கரன் என்னும் சர்வதேச டி.வி.டி - சி.டி.தமிழ்த் தயாரிப்பாளர், விநியோகஸ்தர் கடை திறப்புவிழாவில் கலந்து கொள்ள ரொரண்ரோவுக்கு வந்திருந்தார் நடிகர் விஜயகாந். கேப்டன் பிரபாகரன் என்று வாழ்த்துக் கோஷங்கள் எழுப்பியும் வண்ண வண்ண போஸ்டர்கள் ஒட்டியும் அமர்க்களமான வரவேற்பு தரப்பட்டது. இத்தகைய ஒரு வரவேற்பு எந்தவொரு தமிழ்க் கலைஞருக்கும் இது வரையில் கிடைத்ததில்லை. இந்த அமோக வரவேற்புக்கு காரணம் விஜயகாந் எப்படியும் ஈழத்தமிழர்களைப் பற்றியும் உணர்ச்சிகரமாக உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்டதுதான். நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் விஜயகாந் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் பிரபாகரனைப் போற்றியும் பேசினார் என்றும் - தனது மகனுக்கு பிரபாகரன் என்று பெயர் வைத்ததற்கான காரணத்தைச் சொன்னார் என்றும் - தகவல் பரவின (இது பற்றி விஜயகாந்தின் விளக்கம் பெட்டிச் சேதியில்)

கமல் தனது 'பஞ்சதந்திரம்' படத்தை ரொரண்ரோவில் படம் பிடிக்க வந்தபோது அவரும் இந்தப்புலி ஆதரவுப் பொறிக்குள் சிக்கிக் கொண்டதாக தகவல். விடுதலைப் புலிகளை ஆதரித்துக் கமல் அறிக்கை கொடுத்த பிறகே 'ஷூட்டிங்' நடத்த அவரது யூனிட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதாம்.

அமெரிக்காவிலும் கனடாவிலும் மேடை நிகழ்ச்சி நடத்த ஆசைப்படும் தமிழகக் கலைஞர்கள் விடுதலைப் புலிகள் பற்றி ஒரு நிலைப்பாட்டை எடுத்த பிறகே இங்கு வருவது நல்லது.

## என்ன சொல்கிறார்கள்?

**விசு:**

இலங்கையில் இத்தனை காலமாக நடந்த இன மோதலுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் சூழல் உருவாகியிருக்கிறது. அங்கு அமைதி திரும்ப ஒருமித்த ஒற்றமைக்குரல் ஓங்கி ஒளிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தச் சூழலில் நான் கனடாவுக்குப் போனபோது சந்தித்த எதிர்ப்புகளையும் அதற்கு நான் ரியாகட் செய்ததையும் முற்றிலும் மறக்கவே விரும்புகின்றேன். மறந்து விட்டேன் என்றுகூட சொல்லலாம். நல்லமுயற்சிகள் நடக்கும் இந்தத்தருணத்தில் இதற்கு மேல் நான் எதுவும் பேசவிரும்பவில்லை.

★ ★ ★

**விஜயகாந்:**

ஒரு கடைத் திறப்பு விழாவிற்காகத்தான் ரொரண்ரோ நகருக்குப் போயிருந்தேன். வெளிநாடென்றால் கூட்டம் கூடுவது, கோஷம் போடுவது என்ற பரபரப்புகள் இருக்காது என்று நினைத்திருந்த எனக்கு அங்கே பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. என்னைக் காண்பதற்காகவா அல்லது அந்தக் கடைத்திறப்பு விழாவில் கலந்துகொள்ளவா என்று தெரியவில்லை. பெரிய அளவில் தமிழர்கள் கூடியிருந்தனர்.

கடைத் திறப்புவிழா முடிந்து பொதுவாகப் பேசிக்கொண்டிருந்த என்னை ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொள்ளச் சென்னார்கள். என்னிடம் கேள்விகள் கேட்க இரண்டு நிருபர்கள் மட்டும் தான் என்முன் அமர்ந்தார்கள். அவர்களது கேள்விகள் சினிமா, ரி.வி. சீரியல்கள், திருட்டு வி.சி.டியை ஒழிப்பது பற்றிய 'லேட்டஸ்' ஆய்வுகள் என பொதுவாக இருந்தது. நான் திருட்டு வி.சி.டியை ஒழிப்பது சம்பந்தமாகத் தமிழகத்தில் எடுக்கப்படுவரும் நடவடிக்கைகள் பற்றிப் பேசினேன் மற்றப்படி ஈழத்தைப் பற்றி என்னிடம் யாரும் கேட்கவுமில்லை நானும் எந்தவொரு பதிலையும் தரவுமில்லை.

நமது அண்டைநாட்டுப் பிச்சினையை வேறொரு நாட்டில் உட்கார்ந்து கொண்டு பேசுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. நான் ஈழம்பற்றிப் பேசுவேன் என்ற எதிர்பார்ப்பு என்னைக் காணவந்தவர்களுக்கு இருந்திருக்கலாம். ஆனால், எதை எப்படிப் பேசுவது, எதற்காகப் பேசுவது என்ற வரை முறைகள் எனக்குத் தெரியும்.

## ஊரெழுவில் 'அன்பு வாரம்' அனுஷ்டிப்பு

கோப்பாய்,ஒக்.13

ஊரெழு கணேசா வித்தியாசாலையில் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஊரெழு சாயி மண்டல ஏற்பாட்டில் 'அன்புவாரம்' அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு அந்த 5 நாள்களிலும் தினமும் காலை கூட்டுப்பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து அன்பு, அறம் ஆகிய விடயங்கள் குறித்து சிறப்பு சொற்பொழிவுகளும் இடம் பெறவுள்ளன. (ஒ-72)

## புலிகளால் பெற்றோரிடம் சிறுமி ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.13

விடுதலைப் புலிகள் இயக்கத்தில இணையச் சென்ற சிறுமி ஒருவர் மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த 9 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் துறை அலுவலகத்தில் இயக்கத்தில் இணையச் சென்ற துன்னாலை வடக்கு இந்திர அம்மன் கோவிலடியைச் சேர்ந்த தங்கராஜா சாந்தி (வயது 15) என்ற சிறுமியே வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாவினால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஒ-4-70)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,ஒக்.13

யாழ்வலிமண்ட ஆராய்ச்சி திணைக்களத்தின ஏற்பாட்டில் யாழ் செயலகக் கேட்போர் கூடத்தில் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருந்த காலநிலை மாற்றம் குறித்த கருத்தரங்கு பிற்போடப்பட்டுள்ளதாக தொழில் நுட்பவியல் அலுவலர் குபிரதீபன் தெரிவித்துள்ளார்.

### 19ஆம் நூற்றாண்டில் அழிந்ததாகக் கருதப்பட்டவை உட்பட

# 100 வகையான தவளை இனங்கள் இலங்கையில் புதிதாகக் கண்டுபிடிப்பு

இலங்கையின் மழைக்காடுகளில் புதிதாக 100 தவளை இனங்கள் கண்டுபிடிக்கபபட்டுள்ளதாக அறிவிக்



கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் (65ஆயிரம சதுர கிலோ மீற்றர் பரப்பில்) மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின்போது இந்தப் புதிய தவளை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்கா, பெல்ஜியம், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள தவளை இனங்களில் பல 19ஆம் நூற்றாண்டுடன் உலகில் இருந்து மறைந்து விட்டதாகக் கருதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை மியூசியங்களில் மட்டுமே அவை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளவை அனைத்தையும் விஞ்ஞானிகள் இரு வகைகளாகப் பிரித்துள்ளனர். முதலாவது பிரிவுக்குள் ஐந்து வகைகள் அடக்கப்பட்டுள்ளன.

இந்த ஐந்து வகைகளும் நீர் மட்டத்துக்கு மேலே இலைகளிலோ, பாறைகளிலோ அல்லது தாவரப் பகுதிகளில் தமது முட்டைகளை இட்டு அதன்மூலம் வம்சவிருத்தியை மேற்கொள்பவை.



இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவை நேரடியாகக் குஞ்சுகளைப் பிரசவிப்பதன்மூலம் இனவிருத்தியை மேற்கொள்பவை. இந்தப் பிரிவைச் சேர்ந்தவையே அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இருந்த இனங்கள் குறித்தும் இவை குறித்தும் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் புதிய தவளை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டது குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க விஞ்ஞானியான மட்ஹூவா பிகாஸ்கும் புரா கூறுகையில்:-

"இலங்கைத் தீவின் மழைக்காடுகளில் வாழ்ந்த 95 சதவீதமான உயிரினங்கள் அழிந்துள்ளன. இது எதிர்பார்க்கமுடியாத ஒன்று எஞ்சியிருப்பவற்றைப் பாதுகாப்பதற்கு விரைவான நடவடிக்கை தேவை" என்றார்.

## வீதி புனரமைப்பில் பாராமுகம்

அரியாலை,ஒக்.13

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியைப் புனரமைப்பதற்கு யாழ்.மாநகராட்சி மன்றம் பாராமுகம் காட்டுவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாக இருந்துவரும் சுவாமியார் வீதியைப் புனரமைக்குமாறு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப் படவில்லை எனக் கூறப்பட்டது. (எ-17)

## முகமாலையில் வெள்ளம்

தென்மராட்சி,ஒக்.13

முகமாலைப் பகுதியில் பெய்த மழையினால் படையினரின் சோதனை நிலையம் அமைந்துள்ள பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது.

பெண்களை சோதனை செய்யும் மண்டபத்திற்கு வெளியே வெள்ளம் பெருமளவில் காணப்படுவதால் மண்டபத்திற்கும் வீதிக்குமிடையில் பனம் குற்றி போடப்பட்டு பயணிகள் நடந்து செல்வதைக் காணமுடிகிறது.

இதேவேளை, கொடிகாமம் பஸ் நிலையத்தில் வெள்ளம் காணப்படுவதால் மக்கள் சிரமமடைய நேரிடுகிறது. (ஒ-117)

## தென்மராட்சியில் கண்ணிவியல் வீதி நாடகம்

கொடிகாமம்,ஒக்.13

கண்ணிவெடி விழிப்புணர்வு செயற திட்டத்தின்கீழ் முழங்காவில் கலை மன்றத்தினால் 'கண்ணிவியல்' என்னும் வீதி நாடகம் ஒன்றை தென்மராட்சியின் பல்வேறு பிரதேசங்களிலும் மேடையேற்றிவருகின்றனர்.

மேற்படி வீதி நடாகத்துக்கு இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வசிப்போர் நிதியுதவி வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-ரி)

## பளையிலிருந்து குடாநாட்டுக்கு மணல்

தென்மராட்சி,ஒக்.13

குடாநாட்டில் கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் மணலுக்கு தட்டுப்பாடு நிலவுவதையடுத்து பளைப பகுதியிலிருந்து மணல் வாகனங்களில் ஏற்றி வரப்படுகிறது.

பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து எடுத்துவரப்படும் மணல் முகமாலையில் வாகனங்களிலிருந்து பறிக்கப்பட்டு பரிசோதனை செய்த பின்னர் வாகனங்களில் ஏற்றப்படுகிறது. இதேவேளை, கண்டாவளையிலிருந்தும் முகமாலை ஊடாக மணல கொண்டு வரப்படுகிறது. (ஒ-117)

## தமிழ்க் கைதிகளுக்கு ஆதரவுதெரிவித்து தேவாரஓதல்

தென்மராட்சி,ஒக்.13

தென்னிலங்கை சிறைகளில் உண்ணாவிரதம் மேற்கொண்ட கைதிகளை விடுவிக்கக் கோரி கடந்த புதன் கிழமை யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதரவு நடவடிக்கைகளையொட்டி, அன்றைய தினம் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து திருமறைக்காடு ஆலயத்தின் மூடப்பட்ட கதவுகளைத் திறப்பதற்கு திருநாவுக்கரசு நாயனார் பாடிய தேவாரத்தினை ஒரு மணி நேரம் பாடினர். (ஒ-117)

## தேநீர் கடை உரிமையாளருக்கு 'மனிதக்கடி'

வலி.வடக்கு,ஒக்.13

மது போதையில் வந்தவர்களினால் தேநீர் கடை உரிமையாளர் கடியுண்டார்.

அரியாலை தபால் கட்டைச் சந்திக்கு அண்மையாக உள்ள தேநீர் கடையில் மது போதையில் வந்த இருவர் கலாட்டா செய்ததாகவும் - கடை உரிமையாளர் அவர்களுடன் வாய்த்தர்க்கப்பட்டதைத் தொடர்ந்து உரிமையாளரைத் தள்ளி கீழே விழுத்திக் கடித்ததாகவும் - தெரியவருகின்றது.

இது சம்பந்தமாக பொலீஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இருவரும் பொலீஸாரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். கடை உரிமையாளரின் வேண்டுகோளின் பேரில் எச்சரிக்கப்பட்டு விடப்பட்டுள்ளனர். (ஒ-36)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள குளிர் சாதனப் பெட்டி (West point - England) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K.நடராஜா, 'கைலயங்கிரி' பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய். (9275)

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் பெண் நாயும் கறுப்பு நரை, மண்ணிற பொம்மேரியன் ஆண், பெண் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. நடராசா, செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் (பலாலி றோட், சந்திப்பிள்ளையார் கோவில் அருகில்) (9276)

சாளி மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெ. நிரஞ்சன், இல.16, முருகேசர் வீதி, நல்லூர். (9398)

புன்னாலைக்கட்டுவன் மத்தா ஓடையில் உடன் பயிர் செய்யக்கூடிய நிலையில் 40பரப்புத் தோட்டக் காணியும், கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியில் மானிப்பாய் வீதிக்கு தெற்குப்புறம் 2 3/4 பரப்புக் கடைக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.மோகன், திருநெல்வேலிச சந்தை. T.P.: 070-212988 (9128)

கொக்குவில் மேற்கில் 6 பரப்பு தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. வீடும் கட்டலாம். வேுரீபாலன், இல.10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு. (9346)

நல்லின ஆடுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வேுரீபாலன், இல. 10, கல்லூரி வீதி, கொக்குவில் கிழக்கு. (9347)

பாவித்த, மருந்துவக் கல்விக்கு உகந்த புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. மருத்துவபீட மாணவர்களுக்கு உகந்தது. விரைங்களுக்கு: 01-564365, 071-774144. (C/24178)

உரும்பிராய் தெற்கு, ஞான வைரவர் கோயிலுக்கு அண்மையில் சேமன்புலம் வீதியில் 6 பரப்புக் காணி சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா.சத்தியகுமாரன், மே/பா றோய், தபாற்கந்தோர் லேன், உரும்பிராய் அல்லது 28, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.(9341)

பலாலி வீதி, திருநெல்வேலியில் நான்கு அறைகள் உள்ள நாற்சார் வீடு விற்பனைக்கு உண்டு. நேரடியாக விலை பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு: இல.106, பலாலி வீதி, திருநெல்வேலி. (C/24129)

## இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிறு தினங்களில் ஸ்ரான்லி வீதி, அத்தியடி உபதபால் கந்தோரில் இருந்து 200 யாரில் அமைந்துள்ள 517 இலக்க இல்லத்தில் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (9326)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல், விறாத்துக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் 1Kg 130/-, சுத்தம் செய்யப்பட்டது 1Kg 200/- தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (9318)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. 1kg 130/=. பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.: 3529, 2867. (9357)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: தயாபாலசிங்கம், இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (9209)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்புகள்: 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்; 52, மரதடி வீதி, யாழ்ப்பாணம். (9387)

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. விலை 125/=. தொடர்பு: மு. பேரம்பலம், 16/5, சீனியர் லேன், தட்டா தெரு, யாழ்ப்பாணம். (9395)

## வீடு தேவை

திருநெல்வேலி, கந்தர்மடம், நல்லூர் அண்மித்த பகுதியில் காணியுடன் கூடிய வீடு கொள்வனவிற்குத் தேவை. விளம்பர இல.9358, உதயன். (9358)

## மணமக்கள் தேவை

யாழ்.கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972இல் பிறந்த, 5'4 1/2" உயரமும், அழகிய தோற்றமும், உயர் கல்வியும், கணனித்துறையிலும் கல்வி கற்ற மணமகளுக்கும், 1975இல் பிறந்த 5'11" உயரமுடைய பொறியியலாளர் மணமகனுக்கும் தகுந்த டாக்டர், என்ஜினியர், விஞ்ஞானப் பட்டதாரி மணமக்கள் தேவை. தொடர்பு: ஸ்ரீ இராகவேந்திரா, 159, கோயில் வீதி, நல்லூர். (9290)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அனுஷ நட்சத்திரம், 31 வயதுடைய அரச பணியாற்றும் பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தொடர்பு: செல்லப்பா சுப்பிரமணியம், இளைப்பாறிய ஓவசியர், செம்பாடு, தூதாவளவு, கரணவாய், கரவெட்டி. (9335)

## தேவை

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதன் அண்மித்த பகுதிகளில் குத்தகைக்கு 5000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டடத்துடன் கூடிய காணி தேவைப்படுகின்றது. தொடர்பு: திருமதி மகாலிங்கம். T.P.: 2390. (9359)

## காணி விற்பனைக்கு

ஜும்மா மொஸ்க் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இராசா, No.:3, சத்திரத்துச் சந்தி, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P.: 3137. (9405)

## இசை வகுப்புகள்

ஓர்கன், கிற்றார், ஹார்மோனியம், மெலோடிக்கா ஆகியவற்றின் சுபநேர வகுப்புகள் வரும் செவ்வாய்க்கிழமை (15.10.2002) மாலை 5.00 மணி (புதிய நேரம்) நடைபெறும். புதியவர்களும் இணையலாம். தொடர்பு: R.கீதன், இல. 691, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (9394)

## புதிய இசை வகுப்புகள்

விஜயதசமி அன்று சகல இசை வகுப்புகளும் ஆரம்பம். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்நகர்/ ஆலடி, உயரப்புலம் (வைரவர் கோயிலடி), ஆனைக்கோட்டை/ கோப்பாய் மத்தி (பெற்றோல் ஷெட் அருகில்). (9217)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம் பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் ஏராளமான பயிற்சிகளுடன் 20 வருட வினாத்தாள்கள் உட்பட குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் முடித்துக்கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தினசரி 3 மணிக்குப் பின் தொடர்பு: R.பாலசுப்பிரமணியம், B.Sc.(Cey.), Dip. in Edu. 17/1,பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (9391)

## திருமண சேவை

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை செய்யும் இருபாலரது குறிப்புக்கள், முழு விபரங்களுடன் உண்டு. திருப்தியான துரிதமான சேவை. தொடர்பு: கு.திருவிளங்கம், வாசிக சாலை ஒழுங்கை, 3ஆம் கட்டையடி, கல்வியங்காடு. (9063)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது நிறுவனத்தின் சிரேஷ்ட மாணவன்

**திரு.சஞ்சயன் சச்சிதானந்தம்** *(B.Sc.in Agriculture)*

அவர்களை பட்டம்பெறும் இந்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*16/2, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (9401)

ஆசிரியர்கள், மாணவர்கள்,
நியூ வீணாகானம் இசைமன்றம்.

## பாராட்டுகின்றோம்

வித்துவ சிரோமணி கணேசையரின் அபிமான மாணவர் - யோகர் சுவாமிகளின் ஆத்யந்த சீடர் - மூதறிஞர் - பண்டிதர் காரைநகர் - ஈழத்துச் சிதம்பரம்

**சிவத்திரு.க.வைத்தீஸ்வரக் குருக்கள்** அவர்களுக்கு

*தத்துவ கலாநிதி*

பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தையும், தன் பாண்டித்தியத்தாலும், பண்பாலும் - பணிகளாலும் அந்தக் கௌரவத்துக்குத் தன்னைத் தகுதியாக்கிக்கொண்ட ஆன்றவிந்தடங்கிய சான்றோனையும் பாராட்டுகின்றோம்.

தமிழ், சைவப் பணிகளைத் தன் முழுநேரக் கடமையாக வகித்துள்ள அன்னாருக்கு நல்லாரோக்கியம் நிறைந்த நீடித்த ஆயுளை வழாங்கி அருளும்படி திண்ணபுரத்தானைத் தினமும் வேண்டுகின்றோம்.

*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (9410)

சி.சிவசரவணபவன் (சிற்பி)
மனைவி - மக்கள்.


உங்கள் கதவுகளின் பாதுகாப்பிற்கும், அழகிற்கும் தெரிவு செய்யுங்கள்.



Falz Brass Fittings

(இறக்குமதி செய்யப்பட்டவை.)

சர்னீர் மற்றும் பூட்டு வகைகள்



மொத்தவியாபாரிகள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் தொடர்பு கொள்ள வேண்டியது :

தொ. பேசி : 0777-307657
தொலை நகல் : 01-321361

சகல மொத்த, சில்லறை வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

eLORA


## மனமுவந்து வாழ்த்தி வணங்குகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவின்போது **"தத்துவ கலாநிதி"** கௌரவப் பட்டம் பெறும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சேர்ந்தவரும் சமய, சமூக சேவையாளரும் - எமது தேவஸ்தானத் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி **கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P** அவர்களின் சமய, சமூகப் பணிகளுக்கு ஆரம்பகாலம்முதல் ஆசி வழங்கி ஊக்கமளித்து வருபவருமாகிய

**மூதறிஞர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் வைத்தீஸ்வரக் குருக்கள்**

அவர்கள் மேலும் பல ஆண்டுகள் உடல், உளநலத்துடன் வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழவேண்டும் என்று எல்லாம் வல்ல அருட்சக்தியம்பாள் ஸ்ரீ துர்க்காதேவியைப் பிரார்த்தித்து, வாழ்த்தி வணங்குகின்றோம்.

நிர்வாக சபையினர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(9399)

## ரஷ்யாவில் உயர்கல்வி

### மருத்துவத்தில் MD

(ஆங்கில மூலமானது)

KURSK STATE மருத்துவப் பல்கலைக்கழகம் WHO இலங்கை மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

- ★ ஆகக்குறைந்த அனுமதிக்கான தகைமை G.C.E.A/L
- ★ ஏற்புடைய கற்கைநெறி, விடுதிக்கட்டணங்கள்.

முதலாம் வருடம் - 3200 U.S.D.

இரண்டாம் வருடத்திலிருந்து 2800 U.S.D.

(கட்டணங்களை தவணைக்கட்டணங்களாகச் செலுத்தலாம்)

அனுமதிக்கும், மேலதிக தகவல்களுக்கும்

தொடர்பு: **Uthayajothy**
(Final Year Student in the University)
T.P.: Local 077-984800, 01-334284
T.P.: Russia - 007071 2335823
E.Mail: uthayavan@yahoo.com

(C/24181)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை சண்முகநாதன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கிருலப்பனை, கொழும்பில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை சண்முகநாதன் (01.10.2002) செவ்வாய்க்கிழமை அக்கராயனில் அகால மரணமானார்.

அன்னார் அம்பலவி வேலுப்பிள்ளை - வேலுப்பிள்ளை சோதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் ராணியின் அன்புக் கணவரும் அரவிந்தன் (கனடா), தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜியின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.10.2002) திங்கட்கிழமை அக்கராயனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*35, கொண்டலடி லேன்,*
*நல்லூர்.* (9404)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி கனகசபை இரத்தினம்மா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபை இரத்தினம்மா அவர்கள் நேற்று(12.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், சின்னப்பு - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமகளும் கனகசபையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற வைரவநாதன் மற்றும் தவமணிதேவி, யோகராணி(கனடா), லோகசுந்தரி(லண்டன்), கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வராணி, பஞ்சலிங்கம், இராசேந்திரம்(கனடா), சபாரட்ணம்(லண்டன்), காலஞ்சென்ற இலங்கநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், இராமுப்பிள்ளை, நடராசா மற்றும் நவரத்தினம், இராசலிங்கம்(மலேசியா), கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், யாமினி, தட்சாயினி, நிரஞ்கம், கிட்டு, பாஸ்கரன், காலஞ்சென்ற வெஞ்சிதன் மற்றும் ராஜி, பகிரதன், சசிகலா, ரமணன், குருபரன், ராகுலன், ரஜிதா, லதா, கிருபாகரன், ராஜ், தர்மசீலன், சத்தியசீலன், குணசீலன், விபிசா, தர்சன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று(13.10.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஞான வைரவர் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு.*
*கோண்டாவில்.* (9407)

தகவல்:
சி.பஞ்சலிங்கம்
(மருமகன்).

# திருமலை, அம்பாறைச் சம்பவங்கள் சமாதான முயற்சியை பாதிக்காது!

## என்று கூறுகிறார் ஒஸ்ரின்

கொழும்பு,ஒக்.13

திருமலை மற்றும் அம்பாறைப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் எந்தவிதத்திலும் சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்காது என்று பாதுகாப்புச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எனினும், மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ளவேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை இந்த வன்முறைச் சம்பவங்களைப் பின்னணியாகக் கொண்டு சில வதந்திவலைகள் பினனப்பட்டு சமாதான முயற்சி களைக் குழப்பும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டிருப்பதாகவும் -

அத்தகைய வதந்திகளை நம்பி மக்கள் ஏமாந்து விடக்கூடாதென்றும் -

ஒஸ்ரின் பெர்னாண்டோ கேட்டுள்ளார்.

(ஒ-12)

## அரசியல் நிலைமை பற்றிய கலந்துரையாடல்

தற்போதைய அரசியல் நிலைமை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா யாழ். மாவட்ட கூட்டணி ஆதரவாளர்களுடன் கலந்துரையாடவிருக்கின்றார்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு கூட்டணியின் யாழ். தலைமையகத்தில் இக்கலந்துரையாடல் இடம் பெறும். (ஐ-3)

வன்னி மாவட்ட மாட்டு வண்டி
சவாரியாளர்கள் நடத்தும்
**சவாரிப்போட்டி**
இடம் :- நீர்வேலி சவாரித்திடல்
காலம் :- இன்று (13.10.2002) ஞாயிறு பிற்பகல் 2மணி
'பார்வையாளர்கள் இலவசமாக அனுமதிக்கப்படுவார்கள்'
பழக்கடை மூர்த்தி
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
(C-24205)

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
ஜெமினி ஸ்ரார்
I.T.N
பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(C/24207)

3 மாதத்தில்
சிங்களம் கற்றிட
தலைநகர் பிரபல ஆசிரியர்
Mr. A.S.மல்வான
ஆரம்பம்:- 14.10.2002
4.00 மணி (ப.நே.)
வகுப்பு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாளில் 4-6 மணி வரை
நியூட்டன்
உயர் கல்வி நிறுவனம்.
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம
(9425)

வீணா விஹார் இசைப்பயிற்சி அகம்
விஜயதசமி அன்று புதிய வகுப்புகள் ஆரம்பம்
காலம்:-15.10.2002 செவ்வாய்க்கிழமை
நேரம்:- காலை 10 மணி
இடம்:- இல.165 (115), மனோகராச்சந்தி,யாழ்ப்பாணம்.
(நாவலர் பாடசாலை அருகில்)
ஆசிரியர்கள் -
ஓர்கன், ஹார்மோனியம், மெலோடிக்கா ஆகிய வகுப்புகள்
"இசைக்கலைமணி" திரு. நடேசு செல்வச்சந்திரன்
வீணை - 'கலாவித்தகர்' செல்வி - விஜயலக்ஷ்மி சண்முகராஜா
நிர்வாகி
ஸ்ரீ சாயி கலைக்கழகம், உரும்பிராயிலும் ஓர்கன், ஹார்மோனியம், மெலோடிக்கா வகுப்புகள் செவ்வாய் 15.10.2002 மாலை 4.30மணிக்கு ஆரம்பமாகும்.
(9323)

## மூவிமொண்டோ/சர்வோதயம்

**160 விவசாய, குடிதண்ணீர் கிணறுகள் புனரமைப்புத் திட்டம் - யாழ்.மாவட்டம்**

மேற்படி புனரமைப்புத் திட்டத்திற்கு கண்டகல், சல்லிக்கல், நாகர் கோவில் மணல் போன்றவற்றை பின்வரும் பிரதேசங்களில் விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்களை 15.10.2002இற்கு முன்பதாக சர்வோதய மாவட்ட நிலையம், இல.03 பிளச்சஸ் லேன், சுண்டுக்குளி என்னும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

01. தெல்லிப்பழை
02. கோப்பாய்
03. உடுவில்
04. அளவெட்டி
05. வடமராட்சி வடக்கு
06. தென்மராட்சி
07. சண்டிலிப்பாய்
08. சங்கானை
09. கரவெட்டி

S.V.சங்கரப்பிள்ளை
சிரேஷ்ட திட்ட அலுவலகர்
மூவிமொண்டோ/சர்வோதயம்

(C-24204)

## குழு புகைப்படம் எடுத்தல்

இன்று 13.10.2002 தொழில் நிர்வாகமாணி பட்டம் பெற்ற அனைத்து பட்டதாரி மாணவர்களையும் குழு புகைப்படம் எடுப்பதற்காக CLOAK,GARLAND என்பவற்றுடன் 14.10.2002 திங்கட்கிழமை மாலை 3.00மணிக்கு பல்கலைக்கழக நிர்வாக மண்டபத்தின் முன்பாக சமுகமளிக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரதிநிதி

(9427)

ராஜா யாழ்ப்பாணம்.
13.10.2002 ஞாயிறு வரை
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
கடல்பூக்கள்
10.30, 2.30, 6.30
(C-24065)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விக்ரம், காவேரி நடிப்பில்
காசி (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-24180)

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும்

காலம்: இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 3மணிக்கு
இடம்: யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை

தலைவர் கை.சீவரட்ணம் அவர்களின் தலைமையில் நடைபெறும். சகல சங்க உறுப்பினர்களையும், நீராவியடி பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்/செயலாளர்
நீராவியடி கிராம அ.சங்கம்.

(9426)

## பொருளியல் விருட்சத்திற்கு துளிர்களின் வாழ்த்துக்கள்

பொருளியற் பேராசிரியர்

### நாகலிங்கம் பாலகிருஷ்ணன்



தமிழ் மக்களின் கல்விக்கு 1959ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரும்பணியாற்றியுள்ளார். இவர் இட்டவித்து இன்று பல்வேறு அறிஞர்களையும், ஆய்வாளர்களையும் உருவாக்கி பொருளியல் விருட்சமாக பர்ணமித்துள்ளது. இத்தகைய பேராசான் அவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகம் சிறந்த கௌரவ விருதான (D.Lit.) இலக்கிய கலாநிதி பட்டத்தினை வழங்குவதன் ஊடாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது தரத்தினை உயர்த்திக் கொள்கிறது. அத்தோடு எமது மன்றமும் பெருமையடைகிறது.

இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

(9417)

## மரண அறிவித்தல்கள்

### முருகன் கணபதி

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலடியைச் சேர்ந்த முருகன் கணபதி அவர்கள் நேற்று (12.10.2002) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மட்டுவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
க.துரைசிங்கம் (மகன்)
(லங்கா சிமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்)
*மட்டுவில் வடக்கு,*
*சிவன் கோவில் வீதி,சாவகச்சேரி.*

(C/24206)

### ஆறுமுகம் சுப்பிரமணியம

புலோப்பளையைப் பிறப்பிடமாகவும், அல்லாரை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுப்பிரமணியம் நேற்று (12.10.2002) சனிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி, இராசேஸ்வரி, குணசேகரன் (ஜேர்மனி), மகேஸ்வரி (கனடா), பாஸ்கரன் (ஜேர்மனி), வர்னேஸ்வரி (கனடா), குமுதகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத தந்தையும் ஸ்ரீமுருகன் (ப.நோ.கூ.ச.கொடிகாமம்), துரையப்பா, ஜெயநதிமலர்,வளர்மதி (ஜேர்மனி), செல்வரத்தினம் (கனடா), ஜெகதீஸ்வரன்(கனடா), குலவீரசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரகாஸ், தர்சினி, பத்மசாந்தி, ரமணன், திவ்வியா, அஸ்வினி, தீபக், மாதங்கி, பிரிந்திக்கா, நிசாந்த், அச்சயன், அஸ்வத், அசோத்மன், அயுந்தினி, அபிரந்திகா அமலராஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2002) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.00மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோமசுந்தரம் ஸ்ரீமுருகன்,
மூத்ததம்பி துரையப்பா
(மருமக்கள்)
*அல்லாரை வடக்கு,கொடிகாமம்.*

(C/24207)

### நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை

(பிரபல வர்த்தகர், கொழும்பு)

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.16, தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொணட நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை 10.10.2002 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவநாதர் - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக்கணவரும் புவனேஸ்வரி, சண்முகநாதன், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) மற்றும் சந்தனராசா (சுவிஸ்), கிருஷ்ணகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், பத்மராணி, கிருஸ்ணகுமாரி (ஜேர்மனி), கௌசல்யா (சுவிஸ்), கமலேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற கந்தையா (கனடா) மற்றும் நாகராசா (கிளிநொச்சி), இலகுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தவமணி (கனடா) மற்றும் ஜெயலட்சுமி (கிளிநொச்சி), இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் கணபதிப்பிள்ளை (ஜேர்மனி), செல்லம்மா, காலஞ்சென்ற இராமலிங்கம் மற்றும் கமலாசினி, வள்ளியம்மை (ஆசிரியை புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கனகம்மா, நல்லம்மா (ஜேர்மனி), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி, இராமச்சந்திரன் (கொழும்பு), மகாலிங்கசிவம் (அதிபர் புதுக்குடியிருப்பு) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2002) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, தாளையடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 222 3523*

தகவல்:
மக்கள், மருமக்கள்
நாகராசா, இலகுப்பிள்ளை
(சகோதரர்கள்).

(9421)

### ஜெயக்குணபாலன் பிரதீபன்

அல்லைப்பிட்டி, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஜெயக்குணபாலன் பிரதீபன் (ராஜா) நேற்று (12.10.2002) சனிக்கிழமை அகாலமரணம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயக்குணபாலன் - வரதலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயதீபன் அவர்களின் அன்புச் சகோதரனும் தில்லையம்பலம் - சிவக்கொழுந்து அவர்களின் பூட்டனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - ஞானலட்சுமி ஆகியோரின் பேரனும் விமலசூரியன் அவர்களின் மருமகனும் திருச்செல்வம், யோகலட்சுமி(செல்வம் ஸ்ரோர்ஸ்), முரளீஸ்வரன்(ஈசன்), கிருஷ்னேஸ்வரன்(நேசன்) ஆகியோரின் பெறாமகனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*2ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*

தகவல்:
சி.கிருஷ்னேஸ்வரன்
(சிறிய தந்தை).

(9428)

## அக மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (13.10.2002) ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற 22ஆவது பட்டமளிப்பு விழாவில் "கலைமாண" பட்டத்தைப் பெறுகின்ற எமது அன்புக்குரிய

**செல்வி விஜயகுமாரி இராஜரட்ணம்**

(B.A.Hons பொருளியல் சிறப்புக்கலை)
பெருமகிழ்வோடு மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றேன்.

திருமதி சிவசுப்பிரமணியம
(சின்னத்தம்பி மாமி).

*நாயன்மார்கட்டு.*

(9429)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு. ஜெயம் ரஞ்சித்காந்**

அவர்கள்இன்று 22ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் B.Sc.(Hons) பட்டம் பெறுவதையிட்டு அவரை மகிழ்வுடன் பாராட்டுகின்றோம்.

*K.C.C* விளையாட்டுக்கழக நண்பர்கள.

(9422)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**செல்வி**

**சண்முகலிங்கம் சிவப்பிரியா**

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று (13.10.2002)இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டத்தை (B.A.) பெறுவதையிட்டு அவரை மனமிக மகிழ்ந்து பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

ச.இரத்தினம்,
துரைராசசிங்கம் குடும்பம்,
தர்மகுலசிங்கம் குடும்பம்,
பாக்கியராசா குடும்பம்,
சுப்பிரமணியம் குடும்பம்,
நித்தியானந்தராசா குடும்பம் (நோர்வே).

(9424)





அம்பாறை திருக்கோயில் காஞ்சிரங்குடாவில் அதிரடிப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களில் ஒருவரின் பூதவுடலுக்கு அவரது உறவினர்கள் சோகமே உருவாகி அஞ்சலி செலுத்தும் காட்சிகள்.

## தீவகத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்புக் குழுவினர் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு முறையிட்டபோது - புலிகளின் பிரமுகர்கள் தீவகம் சென்றுவர தடை ஏதும் இல்லை எனக் கடற்படை அதிகாரிகள் பதில் அளித்ததாக கண்காணிப்புக்குழுவினர் தெரிவித்தனர்.

எனினும் பாப்பா தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் திரும்பிவர நேற்று மாலை வரை கடற்படை அனுமதிக்கவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.(ஐ-3)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில் ஊடகம் மற்றும் கலை, இலக்கியத்துறை சம்பந்தப்பட்டவர்கள் பெரும் எண்ணிக்கையில் ஒன்றுகூடவுள்ளனர்.

இந்தியாவில் இருந்தும் இத்துறைகள் சார்ந்த பிரமுகர்களை மாநாட்டுக்கு அழைத்துவர ஏற்பாடாகி வருகிறது.

தென்னிலங்கையைச் சேர்ந்த பிரபல ஊடகவியலாளர்களும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

'படைப்பாளர் சங்கமும் திசை நோக்கிய உசாவலும்' என்ற தலைப்பிட்டு மாநாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாநாடு நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள் ஓர் இடத்தில் சங்கமிக்கும் முதலாவது பெரும் நிகழ்வாக இந்த மாநாடு அமையவுள்ளது. (ஐ)


## மகாலட்சுமி போக்குவரத்துச் சேவை

- விடுமுறைகளை சுற்றுலாவில் கழிக்க விரும்புகிறீர்களா?
- உங்கள் கொண்டாட்டங்களுக்கு சொகுசாகப் பிரயாணம் செய்ய விருப்புடன் உள்ளீர்களா?

*அப்படியானால் எம் போக்குவரத்துச் சேவையை நீங்கள் நாடுங்கள்.*

சுற்றுலாவானால் இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்களைக்காண ஒழுங்கு செய்து தருவோம்.

**குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவை!**
**குளிரூட்டப்பட்ட, சொகுசான ஆசனங்கள்!**
**உங்கள் பிரயாணம் எதுவானாலும் முற்கூட்டியே ஒழுங்குசெய்ய நாடவேண்டிய இடம்:**

*தொலைபேசி இல.*
*2222024*
*2222025*

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/24185)



**I I S**

வடபகுதி கணனி ஆர்வலர்களுக்கு
2003 இல் IIS
நிறுவனம் தரும் பரிசு
விபரம் 15.10.2002
உதயனில்



## மொழிபெயர்ப்பாளர் உடன் தேவை

**பத்திரிகைத்துறை தொடர்பான விடயங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்ய அனுபவமிக்க மொழிபெயர்ப்பாளர் உடன் தேவை.**

*நேரில் உடன் வரவும்*

**மனித வள முகாமையாளர்**
**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-24195)



# English Academy

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**T.P.** :- 021-2222588(home) 077-174512(hand)
**E.mail** :- thangan672002@yahoo. com.

கடந்த 6 வருடங்களாக ஆங்கிலம் கற்பிக்கும் கலையின் காரணமாக முல்லை வாழ் மக்களின் மனங்களை வென்ற எமது கல்விச்சாலை தற்போது ஒருமாத காலத்தில் யாழ் நகர் வாழ் மக்களது மனங்களையும்.....?

அநேகரது வேண்டுகோளுக்கிணங்க புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான 10 மாதகால விசேட கற்கை நெறியில் 2001இல் சித்தியெய்தியோரும் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் கட்டணத்தை இரு தடவைகளில் செலுத்தவும் அனுமதிக்கப்படும் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த நாம் மிகவும் மகிழ்வூட்டப்படுகிறோம்.

*Sat. and Sun. 9 a.m.*

பல்கலை உட்பட எல்லா வகுப்பு மாணவர்களுக்கும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இலக்கணம் கற்பிக்கப்படும். இதைப் பூர்த்திசெய்து அதற்கான பரீட்சையில் சித்தியடைவோர் மட்டுமே எமது ஏனைய கற்கைநெறிகளுக்கு அனுமதிக்கப்படுவர்.

| Grammar 1000/= மட்டுமே | | ஏனைய பாடநெறிகள் |
|---|---|---|
| Basic Grammar | - 07 hours | ★ Text Books |
| Tenses | - 25 hours | ★ Telling Stories |
| Auxiliary Verbs | -12 hours | ★ Writing Letters |
| Clauses | -10 hours | ★ Writing Essays |
| Conjunction | -10 hours | ★ Cursive Writing |
| Direct & Indirect | -08 hours | ★ Spoken |
| | | ★ Past Papers |

*தகவல்:*

*K.T.Rajah (S.S)*

Come and See or Send and See (9161)



# 28 மாதங்களில் நீங்களும் ஒரு பட்டதாரியாகுங்கள்

## இங்கிலாந்தில் ஒரு வருட தொழிற்பயிற்சி

### உங்களோடு சில நிமிடங்கள்......

கடந்த பல வருடங்களாக கணணித்துறையில் பல்வேறு கற்கை நெறிகளை வழங்கிவந்த **BRITISH COLLEGE OF APPLIED STUDIES** தற்போது **BTEC HND** எனும் உயர் கற்கை நெறியொன்றினை வழங்கும் வல்லமை பெற்றுள்ளது.

இந்நிலையில் நீங்கள் க.பொ.த சாதாரணம் அல்லது உயர்தரம் பயின்றுவிட்டு இங்கிலாந்து போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடரும் எண்ணம் கொண்டிருந்தால் உங்கள் இலட்சியத்தினை இலகுவாக அடைந்து கொள்ள **BTEC HND** மூலம் **BRITISH COLLEGE** வழிகாட்டுகின்றது.

வெளிநாடுகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் சில சிக்கல்களை நீங்கள் எதிர்நோக்கியிருக்கலாம்.

VISA பெறுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பனவே உங்களது வெளிநாட்டு உயர்கல்விக்கு தடைகளாக அமைகின்ற பிரதான காரணிகளாகும்.

இவற்றை நிவர்த்தி செய்ய நாம் சில வழிமுறைகளை வகுத்துள்ளோம்.

இந்த வழிமுறைகள் உங்களை வெற்றிப்பாதையினை நோக்கி கொண்டு செல்லும் என்பதில் எங்களுக்கு திடமான நம்பிக்கை உண்டு.

**British College of Applied Studies**

*32' Dharmarama Road, Colombo 06*

தொடர்புகளுக்கு

**01 501145, 01 559255**

**0777 715 788**

## இப்போது இலங்கையில்

# 18 மாதங்களில் BTEC HND.

## அடுத்து இங்கிலாந்தில்

# 10 மாதங்களில் BSc(Hons)

## BTEC HND

### உங்கள் உயர்கல்விக்கான தடைகளை எவ்வாறு தகர்க்கின்றது?

தற்போது உயர்கல்விக்காக UK செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிக துரிதமாக அதிகரித்து வருவதனால் பிரித்தானிய உயர்ஸ்தாநிகராலயம் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், பொருத்தமான மாணவர்களுக்கு மாத்திரமே VISA வழங்குவதற்காகவும் நாளுக்கு நாள் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்திவருகின்றது.

இந்நிலையில் A/L தராதரத்துடன் மாத்திரம் UK இல் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் VISA பெறுவதற்கான உத்தரவாதம் குறைந்து வருகின்றது.

ஆனால் BTEC HND தராதரத்தோடு தனது இறுதியாண்டு பட்டப்படிப்பிற்காக STUDENT VISA விற்கு விண்ணப்பிக்கின்ற மாணவர் VISA வினைப்பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் பின்வரும் காரணங்களால் ஏறத்தாழ 100% உறுதிப்படுத்தப்படுகின்றது.

1.குறித்த மாணவன் BTEC HND யை பூர்த்தி செய்வதன் ஊடாக 2/3 பங்கு பட்டப்படிப்பினை இலங்கையிலேயே நிறைவுசெய்கின்றார். எனவே அவர் தனது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை UK இல் தொடர VISA பெறுவதில் எந்தத்தடையும் இருக்கப்போவதில்லை. இந்த மாணவருக்கு VISA வழங்குவது பிரித்தானிய உயர்ஸ்தாநிகராலயத்தின் கடமையாகவும் மாறுகின்றது.

2.VISA பெறுவதற்கு தேவையான நிதி அனுசரணையில் (*Sponsorship*), இம்மாணவருக்கு 10 மாத காலத்திற்கான நிதி அனுசரனை (*Sponsorship*), மாத்திரமே தேவைப்படுவதால் தனது இறுதியாண்டு கற்கைநெறியினை UK இல் தொடர்வதில் எந்தப்பிரச்சினையினையும் இவர் எதிர்நோக்கப்போவதில்லை.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.